Registered as a Newspaper | பக்கங்கள் 16 | விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 263

புதன்கிழமை 16 ஒகஸ்ட் 2023

ஆடி 31 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

புலிகளின் தலைவர்

# பிரபாவின் மனைவி, மகள் உயிருடன்தான் உள்ளனர்!

## நேரில் சந்தித்து உணவருந்தினராம்

## மதிவதனியின் சகோதரி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 16

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மனைவி மதிவதனி மற்றும் அவருடைய மகள் துவாரகா இருவரும் உயிருடன் உள்ளனர் என்று மதி வதனியின் சகோதரி அறிவித்துள்ளார்.

»15

மாங்குளத்துக்கு அருகே

## 3 வாகனங்கள் விபத்து: மூவர் பரிதாபச் சாவு!

முல்லைத்தீவு, ஒக. 16

முல்லைத்தீவு - பனிக்கன்குளம் பகுதியில், மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் உதயனின் முன்னாள் பணியாளர் உட்பட மூவர் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தனர்.

»15

## கீரிமலைத் தீர்த்தம் நன்னீராக மாற்றம்!

ஆடி அமாவாசையில் அதிசயம்

யாழ்ப்பாணம், ஒக. 16

ஆடி அமாவாசை தினமான நேற்று கீரிமலை புனித தீர்த்தம் நன்னீராக மாறிய அதிசயம் நிகழ்ந்துள்ளது.

»15



## மடுத் திருத்தலத்தில் நேற்றுத் திருவிழா!

மன்னார், ஒக. 16

மன்னார் மடுத்திருத்தலத்தின் திரு விழாத் திருப்பலி நேற்று பல இலட்சம் பக்தர்களின் பங்குபற்றுதலுடன் எழுச்சி பூர்வமாக இடம்பெற்றது.

»15

ஜனாதிபதி ரணில் பார்த்திருக்க

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மாதாவை நோக்கி கண்ணீரோடு கதறல்

மன்னார், ஒக. 16

ஜனாதிபதி ரணில் பார்த்திருக் கையில், அவருடைய கண்க ளுக்கு முன்னால், உறவுகளின் படங்களை ஏந்தியவாறு காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கண்ணீர் விட்டழு தனர்.

»15







மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் வலுசக்தி மையமாகும்

## வவுனியாவில் சீனித்தொழிற்சாலை

## மடுவில் வைத்து ஜனாதிபதி உறுதி



**மன்னார், ஓக. 16**

**மன்னாரை வலுசக்தி மையமாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், வவுனியாவில் சீனித் தொழிற்சாலையொன்றும் அமைக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

மடுத் திருத்தலத்தின் திருவிழாத் திருப்பலி நேற்றையதினம் ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலியின் நிறைவில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மடுத் தேவாலய வருடாந்தத் திருவிழா என்பது எமது நாட்டுக் கலாசாரத்தின் ஓர் அங்கம் என்றே கூற வேண்டும். இந்தத் திருவிழாவை தேசிய நிகழ்வாகக் கருதி அதனைப் பாதுகாக்கவும் தொடர்ச்சியாக நடத்தவும் தேவையான ஆதரவை அரசாங்கம் வழங்கி வருகிறது.

அத்தோடு வருடாந்தம் மடுத் திருவிழாவை நடத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைத்து அருட்தந்தையர்களுக்கும் அரசாங்கம் சார்பில் எனது நன்றியை தெரிவிக்கிறேன்.

மடுமாதாவிடம் பிரார்த்தனை செய்து ஆசீர்வாதம் பெற ஏராளமான பக்தர்கள் இங்கு வருகிறார்கள். கடந்த வருடம் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது, பெருமளவான மக்கள் இங்கு வந்து மடு மாதாவின் ஆசீர்வாதத்தையும் பாதுகாப்பையும் நாடினார். அந்தக் கடினமான நிலைமையில் மடு மாதாவின் ஆசீர்வாதமும் எமக்குப் பலமாக அமைந்தது என்பதை குறிப்பிட வேண்டும்.

மடு மாதா குடிகொண்டிருக்கும் இந்த மன்னார்ப் பிரதேசம் அதிகளவு புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைக் கொண்ட பிரதேசமாகும். இங்கு கிடைக்கும் சூரியசக்தி, காற்றாலை மற்றும் பசுமை ஆற்றல் மூலம் மன்னார் மாவட்டத்தை வலுசக்தி மையமாக உருவாக்க முடியும்.

மேலும், பூநகரியை எரிசக்திகிராமமாக உருவாக்க திட்டமிட்டுள்ளோம். இந்தப் புனித பூமியும், வனமும் பாதுகாக்கப்படும் வகையிலேயே இந்த அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நான் கூற விரும்புகின்றேன். மேலும், இப்பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளின்போது இங்குள்ள அருட்தந்தையர்களின் ஆலோசனைகளையும், வழிகாட்டுதலையும் பெறுமாறு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன். அத்துடன் வவுனியாவில் சீனித்தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளன - என்றார்.

(அ-ம-26)

## கொழும்பு - தலைமன்னார்

# செப்ரெம்பரில் கடுகதி ரயில்

மன்னார், ஓக. 16

கொழும்பு - தலைமன்னார் இடையே செப்ரெம்பர் மாதம் கடுகதி ரயில்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னார் மடுத்திருத்தலத்தில் வைத்து நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் கோரிக்கைக்கு அமையவே இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தச் சேவை விஸ்தரிப்பின் மூலம் ஏராளமான மக்கள் நன்மை அடைவார்கள் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

(அ-ம-26)

# வீடொன்றின் மீது கடும் தாக்குதல்

**6 பேர் கொண்ட குழு நேற்று காடைத்தனம்!**

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ்ப்பாணம், கல்வியங்காடு பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த வன்முறைக் கும்பல் ஆயுதங்களுடன் நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளது.

கல்வியங்காடு ,பூதவராயர் வீதியில் உள்ள அரச உத்தியோகத்தர் ஒருவரது வீட்டின் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பெண்களின் ஆடை அணிந்து வந்த ஒருவர் உட்பட்ட, ஆயுதங்களுடன் வந்த 6 பேர் கொண்ட வன்முறைக் கும்பலே இந்த அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளது.

இதன்போது வீட்டின் வெளியே நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், மாணவர்களின் புத்தகப்பை என்பன தீயிட்டுக் கொளுத்தப்பட்டதுடன் ஜன்னல் கண்ணாடிகள், கண்காணிப்புக் கமராக்கள் என்பனவும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கண்காணிப்பு கமராக்களில் பதிவான காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு கோப்பாய் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். வெளிநாட்டில் உள்ள தரப்பே இங்குள்ள கூலிக்கும்பலுக்கு பணம் அனுப்பி குறித்த வன்முறையில் ஈடுபட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

(அ-ம-27,26)

## வெளிநாட்டு மோகம்

# இளைஞனிடமிருந்து ரூ.4,900,000 'அபேஸ்'

யாழ்ப்பாணம், ஓக. 16

வெளிநாடு செல்வதற்காக முகவர் ஒருவரிடம் 49 இலட்சம் ரூபா பணத்தைக் கொடுத்து ஏமாந்த இளைஞர் ஒருவர் இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட குற்ற விசாரணைப்பிரிவில் முறையிட்டுள்ளார்.

தென்னிலங்கையைச் சேர்ந்த முகவர் ஒருவரின் வங்கிக்கணக்கில்வைப்பிலிட்டே அவர்ஏமாந்துள்ளார். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். வெளிநாட்டு மோகத்தால் பணம் கொடுத்து ஏமாறும் சம்பவங்கள் அண்மைக்காலங்களாகத் தொடர்ச்சியாகப் பதிவாகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-26)

# கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 16

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லைப் பகுதியில், கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து இரண்டு மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் ஈவினைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-23)

# ஈழப் படுகொலைகள் தொடர்பில் விரைந்து விசாரிக்க வேண்டும்!

## முன்னாள் எம்.பி. சரா வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஓக. 16

தமிழருக்கு என்ன நடந்தாலும் சர்வதேசமும் கேட்காது, அயல்நாடான இந்தியாவும் கேட்காது என்ற எண்ணமே இப்போது மேலிடுகின்றது. ஈழத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கான நீதியை உறுதிப்படுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஈஸ்வரபாதம் சரவணபவன் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செஞ்சோலை வளாகத்தில் ஒரே நேரத்தில் 54 மாணவர்கள் உள்ளிட்ட 61பேர் இராணுவத்தால் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைகள் தொடர்பில் இதுவரை எந்தவொரு விசாரணைகளும் முன்னெடுக்கப்படவுமில்லை. நீதி வழங்கப்படவுமில்லை. இதுபோல் நவாலியிலும் கொடூரமான படுகொலை இடம்பெற்றது. இந்தப் படுகொலைகள் தொடர்பில் இனியாவது சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும். ஆனால், சிங்கள பேரினவாதத்திடமிருந்து இதற்கான நீதி என்பது உண்மையில் சாத்தியமே இல்லை. இதை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மிகத்துல்லியமாகக் கணித்தார். இந்த நாட்டில் ஆயுதப்போராட்டமொன்று மீண்டும் தோற்றம்பெறக் கூடிய சூழ்நிலையை தென்னிலங்கையின் இனவாதிகள் ஏற்படுத்தி வருகின்றனர்-என்றார்.

(ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' நீக்கப்பட்டால் நாடு பற்றி எரியும்

## டிலான் பெரேரா எச்சரிக்கை

**கொழும்பு, ஓக.16**
**அரசமைப்பில் இருந்து 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் இந்நாடு பற்றி எரியக்கூடும் என்று டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா எச்சரித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:
13ஆவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பில் உள்ள ஓர் அங்கம். அன்று முதல் இன்றுவரை அதை நான் ஆதரிக்கின்றேன்.
வடக்கு, கிழக்கு மாகாணம் இணைந்திருந்தவேளை காணி அதிகாரம் தொடர்பில் எனக்குக் கவலை இருந்தது. தற்போது அந்தக் கவலையும் இல்லை. நான் 13 ஆவது திருத்தச்சட்டத்தை ஆதரிப்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் இருக்கின்றேன் என்று கருதிவிடவேண்டாம்.
தற்போதைய சூழ்நிலையில் 13 ஐ நடைமுறைப்படுத்தாது விட்டாலோ அல்லது மாகாண சபை முறைமையை இல்லாதொழித்துவிட்டாலோ இந்த நாடு பற்றி எரியும். 13 ஐ அடிப்படையாகக்கொண்டுதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படவேண்டும். இந்த முயற்சியின்போது அரசியல் 'கேம்'களுக்கு இடமளிக்கக் கூடாது - என்றார். (எ-இ)

## சந்நிதி முருகனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 16
வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவனத்திருவிழாவும், 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. மறுநாள் 30ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு சந்நிதி முருகப்பெருமான் தேரில் ஆரோகணித்து அருள்பாலிக்கவுள்ளார்.
31ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்றைய தினம் மாலை 5 மணிக்கு மௌனத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-26)

## வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு பேராசிரியர்களுக்குக் கட்டுப்பாடு

கொழும்பு, ஓக.16
உயர்கல்வி அமைச்சின் அனுமதி இன்றிப் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லமுடியாது என்று பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.
அறிவித்தல் இன்றி வெளிநாடுகளுக்குப் பேராசிரியர்கள் எவரேனும் சென்றிருந்தால் அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கமுடியும் என்று அந்தச் சங்கத்தின் பேச்சாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்ஹ தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம் கொழும்பில் நடந்த ஊடக சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அடுத்த ஆண்டுக்குள் 26 சதவீதமான பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் அபாயம் உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# சிறுசிறு ஆர்ப்பாட்டங்களுக்காக எச்சரிக்கை விடுப்பது வருத்தம்!

## சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.16
ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியாத இரு எதிரணி வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் குழுக்களால் முன்னெடுக்கப்படும் சிறு ஆர்ப்பாட்டங்களைக் கொண்டு அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் தங்கள் பிரஜைகளுக்குப் பயண எச்சரிக்கை விடுத்துள்ளன. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.
இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இந்த விடயம் தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குடன் நேரடியாகக் கலந்துரையாடவுள்ளேன். பயண எச்சரிக்கைகளை நீக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கவுள்ளேன்.
சுற்றுலாத்துறையின் ஊடாக மட்டுமே நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய முடியும் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நம்பிக்கையாகும். கடந்த ஆண்டு சுற்றுலாத்துறை முற்றுமுழுதாக வீழ்ச்சியடைந்திருந்தது. ஆனால் தற்போது அந்த நிலைமை மாறியுள்ளது.
இந்த நிலைமைக்காக இந்தியாவுக்கு விசேட நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இலங்கைக்கு அதிக சுற்றுலாவிகள் வரும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்தியாவிலிருந்து வருடத்துக்கு 48 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். அவர்களில் 4 மில்லியன் பேரை இலங்கைக்கு வரவழைத்தால் பெரும் வெற்றி [illegible] என்றார். (எ-இ)




**தலையிருக்க வாலுகள்தான் இப்ப ஆட்டம் போடுற காலமாப் போட்டுது. வவுனியா பெரியாஸ்பத்திரி சில நேர்ஸ்மார் செய்த ஒரு கேடுகெட்ட காரியத்தைக் கேட்டால், புளோரன்ஸ் நைட்டிங்கேல் கூட தூக்கில தொங்கிடுவா.**

**பத்துநாளைக்கு முதல் அங்க ஒரு தம்பதிக்கு குழந்தை பிறந்திருக்கு. அந்தச் சந்தோஷத்தை பேஸ்புக்கில போட்ட குழந்தையின்ர தகப்பன், மனுசிக்கு பிரசவம் பார்த்த டொக்டர்மாரின்ர பேரையும் போட்டு நன்றி சொல்லியிருந்தார். ஆனால் அப்பிடி டொக்டர்மாருக்கே நன்றி சொன்னவருக்குத்தான் நேர்ஸ்மார் நல்லா வைச்சுச் செய்திருக்கினம். பிள்ளைக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லாததால ஆஸ்பத்திரியிலேயே இருக்கவேண்டிவந்திட்டுது. இந்தநிலையில அந்தக் குழந்தையின்ர தகப்பனுக்கும் அந்த வார்ட்டில் நிண்ட சிங்கள நேர்ஸ் ஒராளுக்கும் இடையில ஒரு சின்னக் கொழுவல். அதை மனதில வைச்சு அந்த நேர்ஸ் குழந்தையைக் கவனிச்சு மருந்து குடுக்காமல் விடுறது, கண்டபடி எல்லாத்துக்கும் இவையோட எரிஞ்சு விழுகிறது, ஏதும் கேட்டால் பதில் சொல்லாம போறது எண்டு இருந்திருக்கறா. ஒருகட்டத்தில இது வாய்த்தர்க்கமா மாற, 'உங்களுக்கு இஞ்ச இடமில்லை. ரிக்கெட்டை வெட்டிக்கொண்டு வேற ஆஸ்பத்திரிக்கு போங்கோ' எண்டு அந்த நேர்ஸ் கத்திப்போட்டு, துண்டு வெட்டவும் வெளிக்கிட்டாவாம்.**


**அதுக்கு 'இது அரசாங்க ஆஸ்பத்திரி. நீங்க நினைச்சபடி மருத்துவம் பார்க்கமாட்டம் எண்டு சொல்லேலாது' எண்டு குழந்தையின்ர தகப்பனும் திருப்பிக் கதைச்சிருக்கிறார். இவர் இப்பிடிக் கதைச்சதால மன்னிப்புக் கேக்காட்டி தாங்கள் மருத்துவம் பார்க்கமாட்டம் எண்டு நேர்ஸ்மார் விடாப்பிடியா நிண்டிருக்கினம். ஒருகட்டத்தில அந்த வார்ட்டில இருந்த எல்லா நேர்ஸ்மாரும் ஒண்டு சேர்ந்து இவையை ஆஸ்பத்திரியை விட்டு வெளியில போகச் சொல்லிக் கதைச்சிருக்கினம். பிறகு அங்க இருந்த டொக்டர்மார், சேர்ஜண்ட்மார் எல்லாரோடையும் குழந்தையின்ர தகப்பன் கதைச்சும் நேர்ஸ்மார் அடங்கேலை. இனியும் இஞ்ச குழந்தையை வைச்சிருந்தால், உந்த நேர்ஸ்மார் குழந்தைக்கு ஏதும் செய்து போடுவினம் எண்ட பயத்தில, அந்தத் தாயும் தகப்பனும் தங்கட விருப்பத்தில ஆஸ்பத்திரியில இருந்து குழந்தையைத் துண்டு வெட்டிக் கொண்டுபோக ஒத்துக்கொண்டிருக்கினம். உடனடியா அவையை துண்டுவெட்டி, வீட்ட அனுப்பச் சொல்லி அந்த வார்ட்டுக்குப் பொறுப்பான டொக்டர் இரவு சொல்லிப் போட்டு போட்டார். ஆனால் நேர்ஸ்மாரோ 'இப்ப எங்களுக்கு நேரமில்லை' எண்டு அடுத்த நாள் விடிஞ்சும் துண்டுவெட்டேலை. குழந்தையின்ர தகப்பனும் எல்லா டொக்டர்மாரிட்டையும், பிறகு ஆஸ்பத்திரிப் பணிப்பாளரிட்டையும் இதைப் பற்றிச் சொல்லி, அவர் நேர்ஸ்மாருக்கு ஓர்டர் போட்டும் கூட ஒண்டும் நடக்கேலை. கிட்டத்தட்ட ரண்டு நாளுக்கு மேல இழுத்தடிச்சுப் போட்டுத்தான் பிறந்து பத்து நாளேயான, அதுவும் வருத்தத்தோட இருக்கிற அந்தக் குழந்தையை துண்டுவெட்டி அனுப்பி இருக்கினமாம். இந்த இழுபறிக்குள்ள குழந்தைக்குப் போட வேண்டிய ஊசியளையும் போடாமல் விட்டிருக்கினம்.**

**மேலதிகாரிமார் சொல்லியும் அதைக் கேக்காமல், தங்கட வன்மத்தை ஒரு குழந்தையில காட்டின இந்த நேர்ஸ்மாரின்ர திமிரை என்னவெண்டு சொல்லுறது? ஆனால் இப்ப ஆளுநரின்ர காதுக்கும் இந்த விசயம் போய், நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறாவாம். பாப்பம், அவான்ர சொல்லாவது அம்பலம் ஏறுதோ எண்டு.**



**- பட்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தன முதலிச்சிபுலம் முருகமூர்த்தி கோவில் மஹோற்சவத்தின் சப்பறத் திருவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. (ம-ரி2,9)

## வீதிச்சமிக்ஞை பொருத்துக

வாசகர் திருமுகம்

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியும், மானிப்பாய் - கைதடி வீதியும் சந்திக்கும் உடுவில் - மருதனார்மடம் சந்தியில் வீதிச்சமிக்ஞை விளக்குப் பொருத்துதல் அவசியமானதாகும்.

குறித்த இரண்டு வீதிகளும் போக்குவரத்து அதிகமாகவுள்ள வீதிகளாகும். அத்துடன் வங்கிகள், இராமநாதன் கல்லூரி, கல்விக்கோட்டங்கள், நுண்கலைக்கல்லூரி என்பன சந்திக்கு மிக அண்மித்ததாக அமைந்துள்ளன.

வாகனப் போக்குவரத்தும் பாதசாரிகள் போக்குவரத்தும் மிகவும் அதிகமாயுள்ள குறித்த சந்தியில் சமிக்ஞை விளக்குப் பொருத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

எனவே உரிய அதிகாரிகள் இது விடயத்தில் கவனம் செலுத்தி சமிக்ஞை விளக்குப் பொருத்துவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

*மகேந்திரதாசன், சங்குவேலி வடக்கு*

## மாகாணமட்ட எல்லேயில் சதாசிவ ம.வி சம்பியன்!



அனலைதீவு, ஓக. 16

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான எல்லே போட்டியில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.

முதலாவது போட்டியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியினையும், இரண்டாவது போட்டியில் மூளாய் சைவப் பிரகாச மகா வித்தியால யத்தையும், காலிறுதிப் போட்டியில் குமுழமுனை மகா வித்தியா லயத்தையும், அரையிறுதிப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியையும் இறுதிப் போட்டியில் வாதரவத்தை விக்கினேஸ் வரா மகா வித்தியாலயத்தையும் வீழ்த்தியே அந்த அணி கிண்ணம் வென்றது.

சம்பியனான அணியின் வீராங்கனைகளான கே.கஜாயினி, கே.தீபிகா, இ.நிஷாயினி, சி.திரிசாளினி, ச.தீபிகா, நி.நிரோஜினி, பி.அபிசாளினி, சி.துளசிகா, ச.சாத்திகா, சே.யாழ்மதி, கு.அபிசாயினி ப.கிரண்சிகா, ம.தர்சிகா, தி.மதுசிகா, லோ.ஜெனிலியா, ப.சுவித்தா, ர.அபினயா, ர.அபிசகா ஆகியோரை பாடசாலை சமூகம் பாராட்டி கௌரவித்துள்ளது. (ம-9)

## லவ்லி சாவா அணி இலகுவான வெற்றி!

யாழ்ப்பாணம், ஓக. 16

உதயனின் ஊடக அனுசரணையில், தென்மராட்சி கிண்ணத் தொடரில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் லவ்லி சாவா அணி அபார வெற்றியைப் பதிவுசெய்தது.

லவ்லி சாவா அணியை எதிர்த்து சங்கா ஸ்ரோம் பைட்டர்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய லவ்லி சாவா அணி 10 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சசி 22 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தமிழ்நேசன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

112 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்கோடு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சங்கா ஸ்ரோம் பைட்டர்ஸ் அணி 7 இலக்குகளால் 99 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 12 ஓட்டங்களால் லவ்லி சாவா அணி வெற்றிபெற்றது. பந்துவீச்சில் அமல்ராஜ் 2 இலக்குகளையும், ராஜ்குமார் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். போட்டியின் ஆட்டநாயகனாக சசி தெரிவுசெய்யப்பட்டார். (ம-26)

## மக்களைப் பாதிக்காத அபிவிருத்தியே தேவை

### சமத்துவக் கட்சி செயலர் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 16

மக்களின் பூர்வீக வாழ்விடங்களை இல்லாதொழித்து- பாதிப்பு ஏற்படும் வகையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்தித் திட்டங்களும் தேவையற்றவையே. இவற்றால் பயனுறுவது சர்வதேச நிறுவனங்களே தவிர மக்கள் அல்லர் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச்செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பூநகரி பொன்னாவெளியில் சிமெந்துத் தொழிற்சாலைக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பூநகரி பிரதேசத்தின் பொன்னாவெளி கிராமத்தில் சிமெந்து தொழிற்சாலைக்கான மூலபொருளான சுண்ணக்கல் அகழ்வை மேற்கொள்வதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் அந்தப் பகுதியை அண்டிய வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு போன்ற கிராமங்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கும். மக்கள் தங்களின் வாழ்விடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை உருவாகும்.

சுண்ணக்கல் அகழ்வு காரணமாக நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு நன்னீர் உவர்நீராக மாற்றமடையும்போது அங்கு மக்கள் வசிக்க முடியாத நிலை ஏற்படும். இந்தத் திட்டத்தை அரசு உடன் கைவிட்டு மக்கள் நலன் சார்ந்து செயற்பட வேண்டும் என்றார். (ம-113)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் செலவுகள் ஏற்படலாம். காரியங்கள் அனுகூலமாகும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். இளைய சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். நினைத்த காரியங்கள் வெற்றிகரமாகும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளிலும் கவனமாக இருக்கவும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும்.

**கடகம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். உறவினர்களால் ஆதாயம் கிடைக்கும். பிணக்குகள் நீங்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்:** ஆதாயம் கிடைக்கும். எதிர்பார்த்த காரி யம் அனுகூலமாக முடியும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி நிறைவேறும்.

**விருச்சிகம்:** பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பா கத் தவிர்த்துவிடவும். அவ்வப்போது சற்று சோர்வு உண்டாகும். கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் லாபம் கூடும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முயற்சிகள் சாதகமாகும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

"உன் அன்பின் தன்மைக்கு ஏற்ற படி உன் செயல்கள் அமையும். உன் செயல்களுக்கு ஏற்றபடி உன் வாழ்க்கை அமையும்"

- சோக்ரடீஸ்


# தடுக்கமுடியாதா விபத்துகளை?

வடக்கு மாகாணத்தில் வீதி விபத்து உயிரிழப்புகள் நாளாந்த நிகழ்வாக மாறியிருக்கின்றன. இளையவர், முதியவர் என்ற வேறுபாடின்றி உயிர்கள் வீதி விபத்துகளால் காவுகொள்ளப்படுகின்றன. தினமும் வெளியாகும் விபத்து உயிரிழப்புகள் தொடர்பான செய்திகள் வீதியில் பயணிக்க அச்சப்படும் நிலைமையைத் தோற்றுவித்திருக்கின்றது.

அண்மைக்காலமாக இடம்பெறுகின்ற பெரும்பாலான விபத்துகளுக்கு அதிவேகம், வீதிப் போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றாமை என்பன பிரதான காரணங்களாகின்றன. வடக்கு மாகாணத்தில் இப்போது அகலக் கால்பரப்பி இருக்கும் போதைப் பழக்கமும் இந்த விபத்துகளில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. போக்குவரத்துச் சட்ட திட்டங்களை மதிக்காமை, தூக்கம் இன்றி தொடர்ச்சியாக வாகனம் செலுத்துதல், போதைப் பொருள்களைப் பாவித்த பின்னரான சாரத்தியம், தமக்கு முன்னால் செல்லக்கூடிய வாகனங்களை முந்திச் செல்லவேண்டும் என்ற மனப்பான்மை, சாரத்தியத்தின் போதும் தொலைபேசி பாவனை என்பனவும் விபத்துகள் நிகழ்வதற்கு ஏதுவாகிவிடுகின்றன. வீதி விபத்துகளைத் தடுக்கும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்துவனவாக இல்லை. விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு அப்பால் வீதி விபத்துகளைத் தடுப்பதற்குரிய செயற்பாடுகளைப் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் செயற்படுத்தவேண்டும். ஒரு தரப்பின் பொறுப்பற்ற போக்கால், வீதியில் பயணிக்கும் அனைவரது பாதுகாப்பும் கேள்விக்குறியாக்கப்படும் நிலையில், வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்த மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகின்றது.

வடக்கு மாகாணத்தில் – குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் – வீதி விபத்துகள் அதிகரித்திருக்கும் நிலையில், சட்டத்தைச் செயற்படுத்த வேண்டியவர்கள் அதைச் சரியாகச் செய்கின்றார்களா என்ற கேள்வியும் எழுகின்றது. போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தவும், விபத்துகளைத் தடுக்கவும் அறிவிக்கப்படும் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதைப் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும். யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் ஏற்பட்ட விபத்தொன்றின் பின்னர், நகரின் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸார் அறிவித்திருந்தபோதும், இன்றுவரை நகரப் பகுதியில் எந்த மாற்றத்தையும் அவதானிக்க முடியவில்லை.

வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸார் காப்புறுதிப் பத்திரத்தையும், சாரதி அனுமதிப் பத்திரத்தையும் மாத்திரம் சோதனை செய்வதோடும் தங்கள் கடமையை முடித்துக் கொள்கின்றனர். அதிவேகமாகப் பயணிக்கும் வாகனங்களையோ, மோட்டார் சைக்கிளில் வீதிகளில் அச்சமூட்டும் வகையில் பயணிப்பவர்களையோ பொலிஸார் கண்டுகொள்வதேயில்லை. பொலிஸாரின் இந்த விட்டேத்திப் போக்கும், 'பொக்கற்றை நிரப்பும்' கலாசாரமும் கூட வீதி விபத்துகளுக்கான காரணிகள் என்பதை மறுக்கமுடியாது. வீதி விபத்துகளைத் தடுப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்பது உண்மையே. ஆயினும் விபத்துகளுக்கான முழுப் பொறுப்பையும் மக்களின் தலைகளில் கட்டிவிட முடியாது. விதிமுறைகளை மீறுவோர் மீது எடுக்கப்படும் கடும் நடவடிக்கைகளே ஏனையோரை வீதிப் போக்குவரத்து விதிமுறைகளைச் சரியாகப் பின்பற்றச் செய்யும். அநியாய உயிரிழப்புகளைத் தடுக்க அதுவே வழி.




# அதிகாரப் பகிர்வுக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படவேண்டும்

ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 16


அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேசிவரும் ஜனாதிபதி, மக்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான மாகாணசபைத் தேர்தலைக் கிடப்பில் போட்டுள்ளார் என்று சட்டத்துறை பேராசிரியரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு வாக்குகளை இலக்கு வைத்தே ஜனாதிபதி 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாகப் பேசுகின்றார். அதேபோல் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை திசைதிருப்பவே ஜனாதிபதித் தேர்தல் பற்றிய தகவல்களும் பரப்பப்படுகின்றன. எதிரணிகளுக்கிடையில் பிளவை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது. இந்த வலையில் எதிரணிகள் சிக்கிவிடக்கூடாது. கூட்டுத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

அரசுக்குள்ளேயே தற்போது எதிரணியொன்று உருவாகி வருகின்றது. இந்த வாய்ப்பை எதிரணிகள் முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதிகாரப்பகிர்வு தொடர்பில் கதைப்பதற்கு முன்னர் மாகாணசபைத் தேர்தல் நடத்த வலியுறுத்த வேண்டும் - என்றார். (ச-44)



# சீனா சென்றார் பிரதமர் தினேஷ்

பிரதமர் தினேஷ் குணவர்த்தன 4 நாள் உத்தியோகபூர்வ பயணமாக சீனா சென்றுள்ளார். இவர் நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து புறப்பட்டு சீனாவைச் சென்றடைந்துள்ளார்.

சீன வர்த்தக அமைச்சு, யுவான் மாகாண அரசு இணைந்து நடத்தும் 7 ஆவது சீனதெற்காசிய எக்ஸ்போ கண்காட்சி மற்றும் 27 ஆவது சீனா குன்மிங் இறக்குமதி, ஏற்றுமதிக் கண்காட்சி ஆகியவற்றில் கலந்துகொள்வதற்காகவே பிரதமர் சீனா பயணமாகியுள்ளார். (ஏ-இ)

# ஒத்திசைவுப் பட்டியல் நீக்கம் ஒற்றையாட்சிக்கு ஆபத்து!

பதறுகிறார் விமல்

கொழும்பு, ஓக. 16

மாகாணசபை முறையிலுள்ள ஒத்திசைவுப் பட்டியலை நீக்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. அதை நீக்கி அதிகாரங்களைப் பகிர்ந்தால் ஒற்றையாட்சியை பாதுகாக்க முடியாத நிலை ஏற்படும் - இவ்வாறு சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

உத்தர லங்கா சபாகயவின் விசேட கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது மட்டுமல்ல அதற்கு அப்பால் அதிகாரங்களைப் பகிர்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஒத்திசைவுப் பட்டியல் நீக்கப்பட்டு, முழுமையாக அதிகாரங்களைப் பகிர்ந்தால் ஒற்றையாட்சியை காக்க முடியாது. இனியும் அதற்கு இடமளிக்கக்கூடாது - என்றார். (ச-44)

நாளை

17.08.2023

வியாழக்கிழமை

ஆடி 32

சுபநேரம் : 07.35 - 09.05

ராகுகாலம் : 01.35 - 03.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு மருத்துவர்களை நாட்டுக்கு அழைக்கும் நிலை!

## மருத்துவர்கள் பற்றாக்குறையால் நெருக்கடி



கொழும்பு, ஓக. 16

**நாட்டில் நிலவும் மருத்துவர் பற்றாக்குறை தொடருமானால் வெளிநாட்டிலிருந்து மருத்துவர்களை நாட்டுக்கு வர வழைக்க வேண்டிய நிலைமை உருவாகும் என்று மருத்துவர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் விசேட மருத்துவர் அசோக குணரத்ன தெரிவித்தார்.**

மருத்துவமனைகளில் நிலவும் மருத்துவப் பற்றாக்குறை - எதிர் நோக்கும் நெருக்கடி நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் விதித்துள்ள கடுமையான வரிக்கொள்கைகள் மற்றும் நாட்டில் நிலவும் பொருளாதார ஸ்திரமற்ற தன்மை ஆகியவற்றால் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

அதனால் நோயாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை வழங்குமாறு சுகா தார தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. தற்போது சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதும், தீவிர சிகிச்சைப் பிரிவைப் பராமரிப்பதும் பெரும் சவாலாக உள்ளது. இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

எனவே அமைச்சு உடனடியாக தலையிட்டு இந்தப் பிரச்சினைக்கு விரைவான தீர்வை வழங்க வேண்டும் - என்றார். (ச-இ)

# சீனி வரியில் மோசடி; விசாரணை கிடப்பில்

## அரசாங்க நிதி பற்றிய குழு அதிருப்தி

கொழும்பு, ஓக. 16



சீனி வரி மோசடியால் ஏற்பட்ட இழப்பீட்டை மீட்பதற்கு நிதியமைச்சு நடவடிக்கை எடுக்கத் தவறியமை தொடர்பாக அரசாங்க நிதி பற்றிய குழுவில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழு நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் கடந்த வாரம் கூடியது. கூட்டத்தில் சீனி வரி மோசடி தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து ஆராயப்பட்டது.

சீனி வரி மோசடி காரணமாக திறைசேரிக்கு 16 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது இந்த இழப்பீட்டை மீட்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நிதி அமைச்சின் அதிகாரிகளிடம் அரசாங்க நிதி பற்றிய குழு கேள்வியெழுப்பியது. இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க நிதி அமைச்சுத் தவறியமை குறித்து குழு அதிருப்தியை வெளியிட்டது. இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் கரிசனையை குழுவுக்கு உடனடியாகத் தெரியப்படுத்துமாறும் குழுவேண்டுகோள் விடுத்தது. (ச-இ)

# சோதனை இயந்திரங்கள் கட்டுநாயக்காவில் நீக்கம்

கொழும்பு, ஓக. 16

கட்டுநாயக்க விமான நிலைய நுழைவு முனையத்தில் இருந்த அனைத்து பாதுகாப்பு சோதனை இயந்திரங்களும் அகற்றப்பட்டுள்ளன.

பயணிகள் விரைவாகப் பயணிப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை விமான போக்குவரத்து சேவை நிறுவனத்தின் தலைமை அதிகாரி எஸ்.ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் உத்தரவின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை வேறு சில நாடுகளில் நடைமுறையில் உள்ளது.

அதற்கமைய சர்வதேச விமான நிலையங்களில் முன்னெடுக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் கட்டுநாயக்க விமான நிலையத்திலும் நடைமுறைப் படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-6)

### சுற்றுலாத்துறை தொடர்பில்

# மாற்றமடையா கொள்கை விரைவில் நடைமுறைக்கு



கொழும்பு, ஓக.16

அரசாங்கம் அல்லது அரசியல்வாதிகள் மாறினாலும் மாற்றமடையாத சுற்றுலாக் கொள்கையொன்று விரைவில் முன்வைக்கப்படும் என்று சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுற்றுலாத்துறை நிபுணர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வுகளின் பின்னர் தயாரிக்கப்பட்ட இந்தக் கொள்கையானது தற்போது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் இரு வாரங்களுக்குள் அது தொடர்பில் தெளிவுபடுத்தப்படும்.

நாட்டில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ள இடங்களில் காணப்படும் நெரிசலைக் குறைக்க விரைவில் செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்படும். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக வேலைத் திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக செயலியொன்றை அறிமுகப்படுத்துவதற்கும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் முகங்கொடுக்கும் பல்வேறு மோசடிகளைத் தவிர்ப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

# ஊழலை ஒழிப்பதற்கு அமெ. ஆதரவளிக்கும்

## அமெ. ஊழல் எதிர்ப்பு இணைப்பாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 16

ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் ஏனைய நாடுகளுடன் அறிவுப் பரிமாற்றத்தை வளர்த்துக்கொள்வதற்கு ஆர்வமாக உள்ளது என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ஊழல் எதிர்ப்பு இணைப்பாளர் ரிச்சார்ட் மோர்கன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்கா திரும்பிய அவர் இலங்கைப் பயணம் தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதில் மேலும் உள்ளதாவது:

சர்வதேச முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கான முன் நிபந்தனையாக நல்லாட்சி அமைய வேண்டுமென குறிப்பிட்டுள்ளனர். அண்மையில் இலங்கையில் நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் பல நல்ல விடயங்கள் காணப்படுகின்றன.

ஊழலை எதிர்த்துப்போராடுவது அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையில் முக்கியமான விடயம். ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா ஏனைய நாடுகளுக்கு உதவும். ஊழலை வெளிக் கொண்டு வரும் பத்திரிகைகளுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் - என்றுள்ளது. (ச-6)

# விளையாட்டுத்துறைக் குற்றங்களை ஆராய்வதற்கு விசாரணைப் பிரிவு!


கொழும்பு, ஓக.16

விளையாட்டுத்துறை தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கான விசேட விசாரணைப் பிரிவை நியமித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விசேட விசாரணைப் பிரிவு கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளது என்று விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் றொஷான் ரணசிங்கவின் கையொப்பத்துடன் வெளியான அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விசேட விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் தலைவராக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜயனாத் வனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

விளையாட்டுத் துறைகள் தொடர்பான குற்றங்களைத் தடுக்கும் சட்டத்தின் 21 ஆவது பிரிவுக்கமைய, அந்தச் சட்டத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 3 வருட காலப்பகுதிக்காக இந்த விசேட விசாரணைப் பிரிவு நியமிக்கப்பட்டுள்ளது என்று அதிவிசேட வர்த்தமானியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச-இ)



# நெறி தவறிச் செயற்பட்டால் ஜனாதிபதியை எதிர்ப்போம்

பொருளாதார முன்னேற்றத்துக்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தெரிவு செய்தோம். அதைவிடுத்து நாட்டுக்கு எதிராக அரசியல் தீர்மானங்களை ஜனாதிபதி எடுத்தால் கடுமையாக எதிர்ப்போம்.

இவ்வாறு பாத்ததும்பர பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

பொய்யான போராட்டத்தால் துரதிர்ஷ்டவசமாக மக்களாணையை நாம் இழந்தோம். ராஜபக்சக்கள் மீது மக்கள் கொண்ட நம்பிக்கையைப் பாதுகாக்கவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

இருப்பினும் ஜனாதிபதியின் அரசியல், பொருளாதாரக்கொள்கைக்கும், எமது அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

அந்தவகையில், நாட்டுக்கு எதிரான அரசியல் தீர்மானங்களை அவர் எடுத்தால் அதை கடுமையாக எதிர்ப்போம் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பற்றாக்குறை அதிகரிக்கும் அபாயம்

## யுனிசெப் எச்சரிக்கை

கொழும்பு, ஓக.16

**நாட்டில் வெளிப்படையான பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் உணவுப் பாதுகாப்பு அதிகரித்துள்ள போதிலும், 62 சதவீதமான குடும்பங்கள், முன்னைய சேமிப்பை பயன்படுத்துதல், கடன் வாங்குதல் மற்றும் கடனில் உணவைக் கொள்வனவு செய்தல் போன்ற உத்திகளைக் கடைப்பிடிக்கின்றன என்று யுனிசெப் அமைப்பு தனது அண்மைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.**

கடந்த வருடம் மே மாதத்தில் 48 சதவீதமான குடும்பங்கள் இவ்வாறான உத்திகளைப் பயன்படுத்திய நிலையில் தற்போது இந்த வீதம் 62 ஆக உயர்வடைந்துள்ளது என்று அந்த அமைப்பு அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டியுள்ளது.

இவற்றில் 26 வீதமான குடும்பங்கள் உற்பத்திகளை மேற்கொள்ளக் கூடிய (வருமானத்தை தரக்கூடிய) சொத்துக்களை விற்பனை செய்தல், அத்தியாவசிய உணவு மற்றும் சுகாதாரத் தேவைகளை குறைத்தல், குழந்தைகளை பாடசாலைக் கல்வியில் இருந்து முழுவதுமாக விலக்குதல் மற்றும் காணிகளை விற்பனை செய்தல் போன்ற உத்திகளை பயன்படுத்துகின்றன என்று அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடம் ஏப்ரலில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் எடை குறைந்த குழந்தைகளின் வீதம் 13.1 ஆகக் காணப்பட்டது. இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இந்த வீதம் 15.8 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்தக் கடும் வறட்சியால் அறுவடை பாதிக்கப்படுவதானது அரிசியின் மொத்த மற்றும் சில்லறை விலைகள் அதிகரிக்க வழிவகுக்கும் என்பதோடு, இது நாட்டில் தற்போதுள்ள உணவுப் பற்றாக்குறையை மேலும் அதிகப்படுத்தக் கூடும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

# நல்லூர் ஆலயச் சூழலிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு ஊசி!

யாழ்ப்பாணம், ஓக. 16

நல்லூர் ஆலயச் சுற்றாடலிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு நாளை 17ஆம் மற்றும் 18ஆம் திகதிகளில் ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றப்படும் என்று யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

நல்லூர் கோயில் வீதி மற்றும் பருத்தித்துறை வீதியில் மாநகர தீயணைக்கும் பிரிவு அலுவலகத்துக்கு அருகில் உள்ளிட்ட இடங்களில் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும்.

ஏற்கனவே வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றத் தவறியவர்கள் இந்தத் தினங்களில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆலயச் சூழலிலுள்ள மக்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டிவளர்க்க வேண்டும் என்றும் கட்டாக்காலிகளாக நடமாடும் நாய்கள் பராமரிப்பு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் மாநகரசபை மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-17)


### பெயர் மாற்றம்

15/9 ஐந்தாம் குறுக்கு, தண்ணீர்ராங்கி, குருநகர், யாழ்ப்பாணத்தில் வதியும் **ம.பைனோட்** ஆகிய நான் எனது பெயரை **லேனாட்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் லேனாட் என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச மக்களுக்கு அறியத்தருகிறேன்.

மரியநாயகம் லேனாட்


# சமனல வாவியில் குறையும் நீர் மட்டம்

கொழும்பு, ஓக. 16

நாட்டில் தற்போது நிலவும் வறட்சி காரணமாக சமனல வாவியின் நீர்க்கொள்ளளவு 14 வீதமாகக் குறைவடைந்துள்ளதால் மின் உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது சமனல வாவி நீர்த்தேக்கத்தின் மூலம் சுமார் 80 மெகாவாட் மின்சாரம் தேசிய மின் அமைப்புக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சமனல வாவியிலிருந்து உடவளவ நீர்த்தேக்கத்துக்கும் நீர் திறந்து விடப்பட்டதனால் உட வளவ நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 5ஆக 751 ஏக்கர் அடியாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் சமனல வாவி நீர்த்தேக்கத்தில் நீரின் அளவு குறைந்தமையை யடுத்து மின்சார சபையின் பணிப்புரைக்கமைய மின்சார உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-ரி2)


## 31ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (18.07.2023) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

**இராஜசிங்கம் நிர்மலாதேவி**



அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (17.08.2023) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

தேவாலய வீதி,
சங்கானை.

(CS 25966) A-1

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**தங்கராஜா தர்மராஜா (வவா)**

சங்குவேலி வடக்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு புதுமடம் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா தர்மராஜா (வவா) நேற்று (15.08.2023) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராஜா யோகம்மா தம்பதியரின் அன்பு புதல்வரும், வசந்தமலர் அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கைலாபிள்ளை பூரணம் ஆகியோரின் பாசமிகு மருமகனும், தர்சினி, ஜீவதர்சன், தர்சீலன், சாந்தகுமார் ஆகியோரின் தந்தையும், தனராசா, காலஞ்சென்ற தவயோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராசா, திசைநாதன், தெய்வேந்திரம், விக்னேஸ்வரன், அன்னலட்சுமி, காலஞ்சென்ற தங்கரத்தினம், ராசமலர் ஆகியோரின் மைத்துனரும், மோகனதாஸ், கஜேந்தினி, பிரசாலினி, சாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்சித், அர்சித், ஆருதி, ஆரித், அகர்வின், ஹாப்ரியேன், றிஸ்மிதா, அக்சரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2023) அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 12.30 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 11 . 1997



மறைவு 15 . 08 . 2023

**சந்திரதாஸ் திவாகரன்**

இல 65, மூத்தவிநாயகர் வீதி, நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரதாஸ் திவாகரன் அவர்கள் நேற்று (15.08.2023) செவ்வாய்க் கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் சந்திரதாஸ் ராதிகா தம்பதியினரின் அன்பு மகனும், சுகன்ஜா, நிருஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.08.2023) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 0870 769
077 3317 406

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலய சுற்றுவீதி கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பின்றிக் காணப்பட்ட நிலையில், ஆலய நிர்வாகம் தற்போது கற்களைக் கொண்டு புனரமைத்து வருகின்றது. (ச-17)


3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி அன்னலட்சுமி செல்வநாயகம்



அன்னையென அரவணைத்தே
ஆறுதலும் தந்தாய்
பொன்மகளாய் இருந்து
எங்கள் வாழ்வினிலே மலர்ந்தாய்

ஆண்டுகள் கடந்து போகும்...
அரும்புகள் பூவாய்,
காயாய், கனியாய்..
பின்னர் விதையாய்..
விருட்சமாய் வளரும் வீழும்!
தினமும் மனதுக்கு
நிம்மதி தந்து...
உங்கள் நினைவுகள்
என்றும் வாழும்

தோற்றம் 09.12.1949 மறைவு 16.08.2020

துரைவீதி, இணுவில் தெற்கு, இணுவில். குடும்பத்தினர்.

(CS/51667)AH-1


## விருதுகளுக்கு விண்ணப்பம்

சாவகச்சேரி, ஓக. 16

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் உயரிய விருதான 'கலைசாகரம்' மற்றும் 'இளங்கலைஞர்' ஆகிய விருதுகளுக்குப் பிரதேச கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதேசத்தில் வதியும் 18 - 40 வயதுக்கு இடைப்பட்ட கலைஞர்களும் 50 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களும் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவங்களை பிரதேச கலாசாரப் பிரிவில் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் என்று தென்மராட்சி பிரதேச கலாசாரப் பேரவை அறிவித்துள்ளது. (ச-ரி2-9)

# சுத்தமான குடிதண்ணீரின்றி 35 வருடங்களாக அந்தரிப்பு



### கண்ணகிநகர் மக்களின் அவலம்

**கிளிநொச்சி, ஓக. 16**

**கண்டவாளை - கண்ணகிநகர் கிராமத்துக்கு சுத்தமான குடிதண்ணீரின்றி 35 வருடங்களாக பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றோம் என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கண்டவாளை பிரதேச செயலாளர்பிரிவுக்குட்பட்ட கண்ணகிநகர் கிராமத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் இங்கு சுத்தமான குடிதண்ணீர் பெறமுடியாத நிலை காணப்படுகிறது. ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் அரசியல்வாதிகள் வருகைதரும்போது வாக்குறுதியை மட்டுமே அளித்துச் செல்கின்றனர்.

ஆனால் எமக்குச் சுத்தமான தண்ணீர் பெற்றுத் தரவில்லை. அதன்காரணமாக பலர் பல்வேறு நோய்க்காரணிகளால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பாடசாலை மாணவர்களின் சீருடைகளைத் துவைப்பதற்குக் கூட சுத்தமான நீரை பல மைல் தூரம் சென்றே பெறுவரும் நிலை காணப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியாவது முன் வந்து எமக்குச் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுத்தர வழிவகை செய்யவேண்டும் - என்றனர். (ச-113)

## மாடு திருட்டு மூவர் கைது

யாழ்ப்பாணம், ஓக.16

மாடு திருடிய குற்றச்சாட்டில் மூவர் மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் மாடுகளைத் திருடினர் என்ற குற்றச்சாட்டில் கடந்த 13ஆம் திகதி இவர்கள் கைது செய்யப்பட்டனர். (எ-125)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 16

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை தினமும் மாலை 6 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

'தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்' எனும் விடயப்பொருளில் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ச-ரி2)



## இந்திய சுதந்திர தினம் யாழில் கடைப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 16

இந்தியாவின் 77 ஆவது ஆண்டு சுதந்திர தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்தியக் குடியரசு ஜனாதிபதி திரௌபதி முர்மு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியும் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து இந்திய தேச விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீர்த்தவர்களை நினைவுகூரும் வகையில் நினைவுக்கல்லும் துணைத்தூதுவர் திரைநீக்கம் செய்துவைத்தார்.

நிகழ்வில் மதத்தலைவர்கள், தூதரக அதிகாரிகள், பணியாளர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-ரி2-125,20,27)

# மருத்துவத் தவறைக் கட்டுப்படுத்த முறைமைகளை மாற்றவேண்டும்!

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.16

மருத்துவத் தவறுகள் ஏற்படுவது சாத்தியமான ஒன்று. அவை அடையாளம் காணப்படும் சந்தர்ப்பங்களில் உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் பெண் ஒருவரின் கர்ப்பப்பை அகற்றப்பட்டமை தொடர்பாக எமக்கு முறைப்பாடு கிடைத்திருக்கின்றது. ஆரம்ப கட்டமாக நேரடியாக அந்த நிலையங்கள் பார்வையிடப்பட்டுச் சில பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. விசாரணைக்காகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட தரப்பினரையும், சம்பவம் நடந்த நேரத்தில் கடமையாற்றியவர்களையும் அழைத்து அறிக்கைகள் பரிசீலிக்கப்படும். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடக்காது இருப்பதற்கான பரிந்துரைகள் வழங்கப்படும்.

அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் மருத்துவத் தவறால் 45 ஆயிரம் பேர் இறக்கின்றனர். மருத்துவத் தவறுகள் ஏற்படுவதற்குச் சாத்தியங்கள் உள்ளன. நாம் அதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவேண்டும். தவறு ஏற்படுகின்றபோது, அவை அடையாளம் காணப்பட்டு எதிர்காலத்தில் அவை நிகழாதிருக்கும் வகையில் முறைமைகள் மாற்றப்படவேண்டும்.

மருத்துவத் தவறு என்பது ஒருவரால் மட்டும் ஏற்படுவது அல்ல. அங்கே உள்ள நிர்வாக அமைப்புகள் மற்றும் சட்டதிட்டங்கள் மற்றும் பௌதீக வளங்கள் போன்ற விடயங்களும் இருக்கின்றன. இது ஒரு கூட்டாக இணைந்த செயற்றிட்டம். தனிநபர்கள் மீது குற்றஞ்சுமத்துவதை விடுத்து சட்டரீதியாக அணுகவேண்டும் - என்றார். (எ-125)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசு தயாளன்
அதிபர்
கோண்டாவில்
இந்துக் கல்லூரி

## புதன் பொய்கை



"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு." - வள்ளுவர்



# வினைத்திறன் மிக்க கற்றலுக்கு...

விளைவை அடிப்படையாகக் கொண்ட கற்றலின் தேவை அதிகரித்துள்ள இன்றைய நிலையில், பாடசாலையால் சிறப்பான விளைவுகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் பாடசாலையில் உயிர்த்துடிப்பான கற்றல், கற்பித்தல் செயலொழுங்கில் மாற்றங்கள் இடம்பெற வேண்டியது அவசியமானதாகும். எந்தவிதமான சமூகப் பெறுமானங்களும் உள்ளீடுகளுமற்ற கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதனை தவிர்த்து மாறும் சமூகப் பொருளாதார கள நிலைமைகளில் எதிர்கொள்கின்ற சவால்களை வெற்றிகொள்ளக் கூடிய பாடசாலைக் கல்வியை மாணவர்களுக்கு வழங்குதலே இன்று எதிர்பார்க்கப்படும் கல்விச் செயன்முறையாகவுள்ளது. இத்தகைய முறையில் சமூகத்துக்காகப் பங்காற்றும் பாடசாலைகள் வினைத்திறன் உடையனவாகும். பாடசாலையின் வினைத்திறன் என்பது பரந்துபட்ட எண்ணக்கருவாகும். இதுதொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்ற வண்ணமுள்ளன. பாடசாலையின் வினைத்திறன் தொடர்பிலான பிரதான குறிகாட்டியாக மாணவர் அடைவு விளங்குகின்றது. எனினும் இன்றைய காலத்தில் மாணவர்களது அடைவு மட்டத்துடன் மட்டுமல்லாது பல்வேறுபட்ட விடயங்களையும் உள்ளடக்கியதாக இது மாற்றமடைந்துள்ளது.

அந்தவகையில் பாடசாலையின் வினைத்திறனில் ஆசிரியர்களது கல்வித்தரம், நடத்தைப்பாங்கு, பாடசாலைச் செயன்முறையில் மனிதத்துவப்பாங்கு, நிதி மற்றும் வளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும், கற்பித்தல் முறையியல்கள், வகுப்பறைக் கட்டமைப்பு என்பன பிரதான செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகக் கொள்ளப்படுகின்றன.

வினைத்திறனான பாடசாலைச் செயன்முறைக்கு சிறப்பார்ந்த திட்டமிடல்கள் பாடசாலைசார் கொள்கையாக்கல்கள் மற்றும் பிரயோகநிலைகள் செல்வாக்குச் செலுத்துவனவாகவுள்ளன. பாடசால்ல என்பது சமூக நிறுவனமாகக் கொள்ளப்படும் நிலையில் சமூக உறுப்பினர்களின் பங்குகொள்ளலும் அவர்களிடையேயான இடைவினையுறவும் முக்கியத்துவமுடையது.

இதுதவிரப் பாடசாலையின் உள்ளீடுகளான ஆசிரியரது இயலுமைகள், மாணவர்களது ஆயத்த நிலை, பெற்றோர்களது ஆதரவு நிறுவனக் கொள்கையாக்கல்கள் பௌதிக வசதிகள் என்பவற்றோடு பாடசாலை நிலைமாற்றுச் செயன்முறையான அறிவுறுத்தற்தரம், தரமான தலைமைத்துவச் செயன்முறை, பாடவிதானத் தரநிலை பாடசாலையும் வகுப்பறை நிலமைகளும் கற்கும் நேரம் மாணவர்களது ஆரோக்கிய நிலை, ஊக்கல் செயன்முறைகள் தூரநோக்கு மற்றும் மாணவர்களது கற்றலும் கற்றல் அடைவுகளும் தொழில் திருப்தி வரவின்மை மட்டம் பாடசாலை இடைவிலகல் நிலை செயலாற்றுகைத் தரம் என்பனவும் இதனோடு தொடர்புடையனவாகும்.

### சிறப்பான கற்றல், கற்பித்தலுக்கு

பாடசாலையில் சிறப்பார்ந்த கற்றல் நிலை தோற்றுவிக்கப்பட வேண்டுமானால் வகுப்பறை நிலமைகளுக்கப்பால் பாடசாலையின் அனைத்துக் கட்டமைப்புக்களும் பாடசாலையின் வெளிச் சூழலும் பொருத்தமான ஒழுங்கு முறைக்குள் கொண்டு வரப்படுதல் மிகவும் அவசியமானதாகும். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் சிறப்பான வகுப்பறை முகாமைத்துவத் திறன் பெற்றவர்களாக விளங்குதல் அவசியமானதாகும். ஆசிரியர்களிடையே தொழில்சார் கண்ணிய நிலை நிறுவனச் செயன்முறையில் வெற்றிகரமான செயற்பாட்டுக்காக நேர்மனப்பாங்குடன் செயற்படல் கற்போனைச் சுய ஊக்கலுக்கு உட்படுத்துவதோடு அவர்களது உளப்பாங்கினை மேன்மைப்படுத்துதல் என்பன அவசியமானவை.

ஆசிரியர்களானவர்கள் பாடசாலைச் செயன்முறையினை குழப்பநிலைக்குட்படுத்துதல், எதிர்மறையான குழு உணர்வினைத் தோற்றுவித்தல், பாரம்பரியங்களைத் தொடர்ந்து பேணுவதில் நாட்டமுடையவராகவும் புதுமை காண விளையாதவர்களாகவும் தனது தொழில்சார் கடமைக் கூறுகளை மேற்கொள்ளாது இருப்பதானது வினைத்திறனான பாடசாலைச் செயன்முறையினைக் கட்டியெழுப்புவதற்கு தடையாகவே அமையும்.

விளைத்திறன்மிக்க பாடசாலை அதிபரானவர் பாடசாலைச் சமூகத்துடன் நல்லுறவை ஏற்படுத்தும் செயலொமுங்குக்குத் திட்டமிடுபவராகவும் வெளிப்படைத் தன்மையுடையவராகவும் முரண்பாட்டு முகாமைத்துவத்தினை வெற்றிகரமாகக் கையாளும் திறனுடையவராகவும் விளங்குதல் வேண்டும். பாடசாலைத் தலைவர் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படும் நபர்களை இனங்காணும் திறனைப் பெற்றவராக விளங்குதல் அவசியமானது. சிறந்த திட்டமிடலாளர் வழிப்படுத்துநர் சமூகத் தொடர்பாளர் என்ற நிலையில் செயற்படுதல் சிறப்பானது. பாடசாலை அதிபரானவர் செயலுபாயத் தலைவராகவும் செயலுபாயத் தலைமைத்துவத் திறன் உடையவராகவும் விளங்குதல் வேண்டும்.

சிறப்பான தொடர்பாடற் திறனைக் கட்டியெழுப்புதல் தனியாள் தேவைகளை நிறைவு செய்தல் சுகாதார வசதிகளை மேம்படுத்தத்தக்கதான பௌதிகச் சூழலைக் கட்டியெழுப்புதல், ஜனநாயகக் கலாசாரச் சூழலினை பாடசாலையில் கட்டியெழுப்புதல், பல்வகைமை நிலையினை அங்கீகரித்தல், பொருத்தமான மொழிப் பிரயோகத்தினைக் கையாளல், பாடசாலைக்குப் பொருத்தமான அபிவிருத்தி அணுகுமுறைகளைக் கையாளல் என்பன அவரிடம் எதிர்பார்க்கப்படும் அவசியமான திறன்களாகவுள்ளன.

### பாடசாலை வினைத்திறனில் ஆசிரியருடைய பங்களிப்பு

பாடசாலைக் கல்வியின் ஒவ்வொரு செயன்முறையும் மாணவரிடையே ஆளுமைத் திறனைக் கட்டியெழுப்புவதாக அமைந்து காணப்படவேண்டும். ஒவ்வொரு மாணவனும் உன்னதமான வெற்றியினை அடைந்து கொள்வதற்கு ஆசிரியரது பங்குபற்றுதல் மிகவும் அவசியமானதாகும். இதன் காரணமாக ஒவ்வொரு மாணவனதும் ஆளுமை விருத்திச் செயன்முறையில் ஆசிரியரது பங்களிப்பு உன்னதமாக இருக்க வேண்டும். இதற்காக குழுக் கலந்துரையாடல் விவாதத்துக்கான கள நிலமைகளை ஆசிரியர்கள் வகுப்பறையில் ஏற்படுத்துவது அவசியமானதாகும் என்பதோடு பாடசாலைத் தலைவர்களும் அதற்கான செயற்பாடுகளில் பங்கு கொள்ளுதலும் அவசியமானது. இந்தச்சந்தர்ப்பத்தில் நுண்ணறிவுத் திறன் கூடிய மாணவனது பங்களிப்பு அதிகமாக இருப்பதோடு ஏனைய மாணவர்களது பங்களிப்பு குறைவானதாகவும் அமைந்து காணப்படுகின்றது. இதன் காரணமாக ஆசிரியரது தலையீடு மிகவும் இன்றியமையாததாக வேண்டப்படுகின்றது. இதன்மூலம் ஏனைய மாணவர்களையும் பங்காளராக மாற்றமுடியும். மாணவர்களிடத்தில் தன்னம்பிக்கையினைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் பிள்ளையினது ஆளுமைத் திறன் விருத்தியில் ஆசிரியரது பங்களிப்பு முக்கியமானதாகும்.

பிள்ளையினுடைய உள்ளார்ந்த திறன்களை இனங்கண்டு விருத்தி செய்வதனூடாக அவனிடத்தில் சிறப்பான ஆளுமைத் திறனைக் கட்டியெழுப்புதல் வேண்டும். கல்வியினுடைய இலக்கு அனைத்துவிதமான உள்ளார்ந்த திறன்களது விருத்தியின் உள்ளடக்கமாகும். ஆளுமை விருத்தியில் அறிகைசார் எண்ணக்கருவினது பிரயோகமும் அவசியமானதாகும். ஆசிரியரானவர் வெறுமனே தகவல்களை வழங்கும் முகாமையாளராகவல்லாது அதற்கப்பாலும் நகரவேண்டியவராயுள்ளார். இங்கு முழுமையான விழுமிய இயல்புகளின் உள்ளடக்கங்களையும் மாணவர்களிடம் பரிமாறி வளர்க்க வேண்டியவராய் உள்ளார். ஆசிரியரானவர் கல்விச் செயன்முறைக்கும் மாணவருக்கும் இடையிலோர் தொடர்பாளராக விளங்குதல் வேண்டும்.

சரியானவற்றை தவறானதிலிருந்து பிரித்தறிய முடியாத நிலையிலுள்ள பிள்ளைகளிடம் சிறப்பான சிந்தனைத் திறனை வளர்ப்பதற்கு பகுப்பாய்வுச் சிந்தனை தர்க்கரீதியான சிந்தனைத் திறன்களை வளர்த்தெடுக்க வேண்டியுள்ளமையை ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ளல் அவசியமாகும்.

இன்றைய வளர்ந்தோரில் பெரும்பாலானோர் சரியானவற்றைத் தவறானதிலிருந்து பிரித்தறிய முடியாதவராகவும் நல்ல தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதவராகவும் உள்ள நிலைமையானது தொழிலுலகில் வாழ்க்கை முறையில் அவர்களது செயற்பாடுகள் முரண்பாடான நிலையினைத் தோற்றுவித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய நிலையினை எதிர்காலச் சந்ததியினரும் அடையாதிருக்க வேண்டும் என்பதில் கூடிய கரிசனை செலுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும். தற்காலத்தில் கற்றோர் எனக் கூறப்படுபவர்களில் பெரும்பாலானோர் குழுவாகச் சேர்ந்து இயங்கும் மனப்பாங்கு அற்றவர்களாகவும் நிறுவன வளர்ச்சி நோக்கிய நேர்மனப்பாங்கு உணர்வு அற்றவர்களாகவும் காணப்படுதலானது நிறுவன வளர்ச்சியில் பாதக நிலையைத் தோற்றுவித்துள்ளமை அவதானத்துக்குரியது. எதிர்காலச் சந்ததியினரிடம் இத்தகைய குறைபாடுகள் இல்லாது ஒழிக்கப்படுவதில் பாடசாலையின் பங்களிப்பு எத்தகையது என்பது தொடர்பில் ஆசிரியரது தெளிவு மிகவும் இன்றியமையாததாகும்.

பாடசாலையொன்றின் பிரதான நோக்கம் சமூகத்துக்குப் பொருத்தமான நற்பிரஜையை உருவாக்குவதற்கான பொதுக்கல்வியை வழங்குவதாகும். ஆகவே ஒன்றிணைந்த ஆளுமைத் திறன் கொண்ட நபர் ஒருவரை உருவாக்குவதில் கல்வி வழங்கும் செயன்முறையில் பங்கு கொண்டுள்ள அனைவரும் இணைந்து பணியாற்றுதல் அவசியமானதாகும். இதுவே இன்றைய காலத்தின் தேவையுமாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தின் பனை உற்பத்தி



செல்வகுமார் ரினோஷன்
மூன்றாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

புல்லினத்தைச் சேர்ந்த ஒருவகையான தாவர இனமே பனை மரங்களாகும். பனையின் இளம் பருவத்தினை வடலி என்பர். இவை ஆபிரிக்காவைத் தாயகமாகக் கொண்டிருந்தன. பின் அங்கிருந்து மனிதன் இடம்பெயர்ந்த இடங்கள் எல்லாம் அவற்றை எடுத்துச் சென்றான். அதன்படி ஆசியாவில் இந்தியா, இலங்கை, மலேசியா, இந்தோனேசியா, மியான்மர், தாய்லாந்து, வியட்நாம், சீனா மற்றும் கொங்கோ போன்ற நாடுகளில் பனைகள் காணப்படுகின்றன. இலங்கையில் வடமாகாணத்தில் அதிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பனைகள் செறிந்து காணப்படுவதால், பனைகளை மையப்படுத்திய தொழில்துறைகளும் இங்கு விருத்தி கண்டுள் என. பனையின் அனைத்துப் பகுதிகளும் ஏதோவொரு வகையில் மனிதனால் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. அதுவே பனையை மையப்படுத்திய திட்டங்கள் பொதுவான தொழில்துறையாக பரிணமிக்கக் காரணம் எனலாம். 1972ஆம் ஆண்டில் அப்போதைய நிதியமைச்சர் ஆ.பெரேரா இந்தத் தொழிலாளர்களின் முன்னேற்றத்துக்கு வித்திட்டார் எனலாம். அவருக்கு ஆதரவாக இலங்கை சமசமாசக் கட்சியின் யாழ். மாவட்டத் தலைவர் விஸ்வநாதன், செனட்டர் ஜி.நல்லையா, ஆங்கில ஆசிரிய ராகவும் யாழ் கச்சேரியில் பொதுசனத்தொடர்பு அதிகாரியாக பணியாற்றிய க.நடராசா என்போர் இருந்தனர். அவர்கள் நிதியமைச்சருடன் கலந்தாலோசித்து நல்ல திட்டங்களை முன்னிறுத்தினர். இந்தத்தொழிலாளர்களுடைய முன்னேற்றத்தை தூரநோக்காகக் கொண்டு செயற்பட்டு அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதால் பனைத்தொழில் அடுத்தகட்டத்தை நோக்கி நகர்ந்து சென்றது.

இன்றைய நாள்களில் பனை ஓலைகளை மையப்படுத்திய உற்பத்திகள் நாளுக்கு நாள் எழுச்சிபெற்று வருகின்றன. போரின் பின்னர் இந்தத் தொழில்துறையில் சிறு வீழ்ச்சி ஏற்பட்டாலும் தற்போது ஏற்றம் காண்கின்றமை மறுத்துரைக்க முடியாததே. இதேவேளை, ஆரம்பத்தில் தமிழர் தாயகத்தையும், இலங்கையையும் தன் விற்பனைத் தளமாகக் கொண்டிருந்த பனை யுற்பத்திப் பொருள்கள் தற்போது கண்டங்கள் கடந்து மேற்கத்தேய நாடுகளில் பெரிதும் விரும்பப்பட ஆரம்பித்துள்ளன. இந்தத் தொழில்துறை மேலும் மேம்படுத்தப்படும் பட்சத்தில் பனையுற்பத்திப் பொருள்கள் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பங்காற்றும் என்பதுடன் அந்நியச் செலாவணியையும் ஈட்டிக்கொடுக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

# எந்தவொரு பிரச்சனைக்கும் தற்கொலை தீர்வாகாது

சி.கதீசனா
2ஆம் வருடம்
ஊடகக் கற்கைகள்
யாழ். பல்கலைக்கழகம்



உலகில் மனிதன் எதற்காகப் படைக்கப்படுகிறான்? இங்கு பிறக்கும் உரிமை ஒருவனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும்போது அவன் இறப்பைத் தேர்வு செய்யும் உரிமையை ஏன் அவன் நிர்ணயித்துக் கொள்கின்றான்? ஒருவனுடைய மரணம் என்பது சோகமானது. அதிலும் தற்கொலை என்பது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத அளவுக்குச் சோகமானது. தற்கொலைகளின் முடிவுகள் அவர்களை மட்டும் அல்ல அவர்களைச் சுற்றி இருக்கும் அனைவரையும் பாதிக்கும். ஆறறிவு உள்ள இந்த மனிதன் இவ்வாறான தவறான முடிவைத் தேர்ந்தெடுப்பது என்பது முற்றிலும் முட்டாள்தனம்.

மன அழுத்தம், காதல் தோல்வி பரீட்சையில் தோல்வி, தொழிலில் தோல்வி சமூக பொருளாதார நெருக்கடி, கடன் சுமை, நோய்கள், அவமானம், தனிமை, கோபம், விரக்தி, சமூக நெருக்கடி, வாழ்வு பற்றிய குழப்பம், குடும்பத்தகராறு, குழந்தையின்மை, போதைக்கு அடிமை, வறுமை, போன்ற காரணங்கள் தற்கொலைக்கு ஏதுவாக இருக்கின்றன. தற்காலத்தில் தற்கொலைக்கு ஒரு காரணமாக போதைப்பொருள் பாவனையும் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துச் செல்வதைக் கூறிக்கொள்ளலாம். இதனைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட திணைக்களம் நடவடிக்கை எடுக்கின்றதா? என்றால் அதுவும் கேள்விக்குறியாக வருகின்றது. ஒவ்வொரு தற்கொலையின் பின்னணியிலும் பல்வேறு உயிரியல், உளவியல், மற்றும் சமூகக் காரணிகள் உள்ளன.

**கல்வியியலாளர்கள் கூட உயிர்மாய்க்கும் நிலை**

முன்னைய காலங்களில் தற்கொலைக்கு முக்கியமான காரணம் கல்வியறிவு இன்மை தான் என்று நம்பப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய காலத்தில் கல்வியறிவு உள்ளவர்கள், பிரபலங்கள், மருத்துவ மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலதிபர்கள் என்று கல்விச் சமூகத்தினர்தான் அதிகளவில் உயிர்மாய்த்துக் கொண்டிருக்கின்றனர். தற்கொலை என்பதை வெறும் மன நோயாகவோ அல்லது தனிமனித முடிவு என்றோ ஏற்றுக்கொள்ள முடியாது. அண்மையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக தவறான முடிவுகளை எடுத்து தங்கள் உயிரினை மாய்த்துக்கொள்ளும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது.

தற்கொலை செய்யும் முடிவில் இருப்பவர்கள் தம் வாழ்க்கையில் பெறுமதியை உணரத் தலைப்பட வேண்டும். உங்களுடைய எதிர்கால வாழ்க்கை, இலட்சியக் கனவு, பெற்றோர், உறவுகள் என ஒவ்வொன்றையும் சிந்தித்துப் பாருங்கள் எந்தவொரு பிரச்சினைக்கும் மரணம் முடிவல்ல. சரியான முடிவைத் தேடிக் கொள்ளுங்கள்.

இவ்வாறான விஷமத்தனமான முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் உங்கள் அருகில் உள்ளவர்களுடன் பேசுங்கள். அவர்கள் உங்களைச் சரியான பாதையை நோக்கி நகர்த்திச் செல்வார்கள். வழிப்படுத்துவார்கள்.



## கலியுகம்

தினசரி காலை பத்திரிகை பார்த்தால்
இங்கே விபத்து, அங்கே விபத்து
பாலரிலிருந்து பெரியோர் வரையும்
இறப்புகள் என்றே இருப்பதைப் பார்த்தால்
பிறப்பன்றே தீர்மானிக்கப்பட்டது இறப்பென்றேயாகினும்
காலமாகாமல் அகாலமாவது
விதியின் செயலா, கலிகாலச் செயலா?
என்னவென்று சொல்வது?

சி.மகாலட்சுமி
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கம் தொலைக்கும் மனித சமூகம்!



தருமலிங்கம் லுகிர்தா
ஊடக கற்கைகள் துறை
யாழ் பல்கலைக்கழகம்

இரவு நேரம் மனிதர்கள் உறங்குவதற்கானது என்பதனை நவீன தொழில்நுட்பம் மாற்றியமைத்து விட்டது. மனிதனின் உளம் மற்றும் உடலின் நலனுக்கு அத்தியாவசியமான விடயங்களில் தூக்கமும் உள்ளடங்குகின்றது. நிம்மதியான தூக்கம் இருந்தால் உடல் எடை அதிகரிப்பு, நீரிழிவு, இருதய குறைபாடுகள் முதலிய பல நோய்களைத் தவிர்க்கலாம். 'வைகறைத் துயில் எழு' என்பது ஆன்றோர் வாக்காகும். இங்கு வைகறை என்பது பிரம்ம முகூர்த்தம் எனப்படும் அதிகாலை நேரமாகும். சூரிய உதயத்துக்கு சற்றுமுன் வரை சூரிய கதிர்களின் தாக்கமற்ற நேரமாகும். இந்த நேரத்தில்தான் நம் உடலுக்குத் தேவையான தூய்மையான பிராணவாயு கிடைக்கிறது. அப்போது நாம் செய்யும் உடற்பயிற்சி எமது உடலின் இரத்த ஓட்டம் சீராக அமைய உதவுகிறது. அதிகாலையில் நாம் எடுக்கும் முடிவுகள் பெரும்பாலும் சரியாகவே இருப்பதால் அதிகாலையில் எழுவது எமது வாழ்வின் வெற்றிக்கு முதற்படியாக அமையும். பெரும்பாலானோர் இன்று அதிகாலையில் எழத்தவறுகின்றோம். ஏனெனில் இன்று பலர் இரவு நேரங்களில் கண் விழித்து தமது அன்றாட வேலைகளை ஆற்றும் வழக்கத்தை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் உறங்குவதற்கான நேரமானது மாற்றமடைந்து வருகின்றது.

### வாழ்வின் வெற்றிக்கு...

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களைப்பார்த்தால், அவர்கள் அனைவரும் அதிகாலையில் எழும் வழக்கத்தை உடையவர்களாகக் காணப்படுவர். அதிகாலையில் மனம் தெளிவாக இருப்பதனால் அன்றைய வேலைகளைத் திட்டமிடுவது எளிதாக இருக்கும். அமைதியான அதிகாலை வேளையில் ஆழ்மனம் செய்யும் பிரார்த்தனைகளை பிரபஞ்ச சக்திகள் நிறைவேற்றும் என்பது ஞானிகளின் நம்பிக்கை. தினமும் அதிகாலை எழுபவர்களால் மனதைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடிகிறது. அவ[illegible]ந்தக் காரியத்தையும் திட்டமிட்டு கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளும் ஆற்றல் மிக்கவர்களாகக் காணப்படுவர். தினமும் அதிகாலை எழுவது என்பது ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் ஒரு மணி நேரம் அதிகமாக கிடைக்க வழி செய்கிறது. அந்த ஒரு மணி நேரத்தைப் பயன்படுத்தினால் ஓர் ஆண்டுக்கு 365 மணி நேரம் நமக்கு கூடுதலாக கிடைக்கும். எமக்குக் கிடைக்கும் அதிகப்படியான நேரத்தைக் கொண்டு குடும்ப முன்னேற்றத்திற்காக, வேறொரு காரியங்களை பகுதிநேர வேலையாகவோ ஆற்றுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ள முடியும்.

பொதுவாக சரியான உறக்கமின்மையையும், ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழிப்பது, உறக்க சுழற்சிமாற்றம் போன்ற உறக்கம் சார்ந்த ஒழுங்கீனங்கள் ஒருவர் விழித்த பின்பும் ஏற்படும் சோர்வுக்கான காரணமாகின்றன. கைபேசிகள், கணினிகள் போன்றவற்றின் திரையிலிருந்துவரும் நீலக்கதிர்கள் நெடுநேரம் பாதிப்பை ஏற்படுத்தவல்லன. இது தூக்கம் மற்றும் விழிப்பு சுழற்சியை கட்டுப்படுத்தும் 'மெலடோனின்' எனும் சுரப்பியை பாதித்து, உறக்கச் சுழற்சியைக் கெடுக்கிறது. இதன் விளைவாகவே நாம் விழிக்கும் போது, உடலில் சோர்வை உணருகின்றோம். அத்துடன் தூக்கத்தில் குறட்டைவிடுவது, நெடுநாள் இரவு தூக்கமின்மை, தூக்கத்தில் நடத்தல், தூங்கும்போது நமக்கே தெரியாமல் சுவாசம் தடைப்படுவது போன்ற தூக்க ஒழுங்கீனங்களும் காலையில் விழித்த பின்னர் சோர்வினை ஏற்படுத்துகிறது. உறங்கச் செல்வதற்கு முன்னர் 'காபின்' அதிகமாக உள்ள பொருள்களை உண்பது தூக்கத்தை கெடுக்கும். காபினில் உள்ள கூறுகள் மூளையை விழிப்போடு வைத்திருந்து நீண்ட நேரத்துக்கு உறங்கவிடாமல் செய்யும். அது மட்டுமல்ல, நள்ளிரவில் அதிக முறை விழித்தெழச் செய்யும். முதுமை, நுளம்புகளின் தொல்லை, காலநிலை மாற்றம் மன அழுத்தம், பயம், நோய் போன்ற காரணங்களால் உறக்கத்தை தொலைக்க நேரிடுகின்றது. அப்போது தகுந்த மருத்துவரின் ஆலோசனையின் படி உறங்குவதற்காக மாத்திரைகளை எடுத்துக்கொள்ளும் தன்மை இன்று பரவலாகக் காணப்படுகிறது. இந்த மாத்திரை தினசரிப் பழக்கமாக மாறாமல் கவனிப்பது மிகவும் அவசியமாகும். சிலர் உறங்குவதற்காக மது குடிப்பதாக கூறுவர். மதுவானது ஒருவர் உறங்கும் நேரத்தைக் குறைத்துக் கொண்டே வரும். மதுவில் உள்ள கூறுகள், உடனே ஒருவரை உறங்கவைத்தாலும், ஆழ்ந்த உறக்கத்துக்குச் செல்லாமல் மூளையை விழிப்புடன் வைத்திருக்கும்.

### உறக்கமின்றித் தவிக்கும் மாணவர் சமுதாயம்

இன்று மாணவர்கள் பலர் எதிர்கொள்ளும் சவாலாக கல்விச்சுமை காணப்படுகிறது. போட்டிப் பரீட்சைகளை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்களில் 8 மணி நேர உறக்கத்தில் 5 மணி நேர உறக்கத்தைக் கூட மாணவர்கள் எடுத்துக் கொள்வதில்லை. பாடசாலை முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை உறக்கத்தைத் தொலைத்து தமது கனவுகளை எட்டிப்பிடிக்க அயராது உழைக்கின்றனர். அதிக வெளிச்சம் மற்றும் அதிக சத்தம் இல்லாத இடத்தில் உறங்குவது சிறந்த உறக்கத்துக்கு வழியமைக்கும். அதிக சத்தம் நிறைந்த இடத்தில் உறங்கும்போது, எமது காதுகள் வழியாக மூளைக்கு அந்தச் சத்தங்கள் உறக்கத்தைக் கெடுக்கும். சரியான வெப்பநிலை உள்ள அறையில் உறங்குவது, ஆழ்ந்த, நிம்மதியான உறக்கத்தைத் தரும். மேலும், காலையில் புத்துணர்வுடன் விழிக்க உதவும். நமது உணவு முறையையும் பழக்கவழக்கங்களையும் மாற்றிய பின்னரும் இரவு உறக்கமின்மையையும், காலையில் சோர்வும் தொடருமாயின், உடனடியாக வைத்தியர்களை அணுக வேண்டியது அவசியம். தினமும் போதிய நேரம் உறங்குவதே நாம் உற்சாகத்தோடு இயங்குவதற்கு துணையாகிறது. அதுவே ஆற்றலைப் பெருக்கும் என்பதை நினைவில் கொள்வோம்.



(இன்று பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் உறக்கமின்மை என்பது பெரும் பிரச்சினையாக உருப்பெற்று வருகின்றது. எனவே, இந்த விடயப்பரப்பில் இயங்கிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உளவளத் துணையாளர் திருமதி சாவித்திரிதேவி ரவிச்சந்திரனின் கருத்துக்கள், கேள்வி பதில் வடிவில் இங்கு தரப்படுகின்றன.)

### தூக்கமின்மையால் பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு அணுகுகின்றீர்கள்.?

இன்று தூக்கமின்மை என்பது மாணவர்கள் மத்தியில் ஒரு பொதுப்பிரச்சினையாக மாறியுள்ளது. ஆரம்பத்தில் அவர்களது பிரச்சினைக்குரிய காரணத்தைக் கண்டறிதல், பின்னர் அதற்குரிய பின்னணியை அறிதல் அவர்களுடைய பிரச்சினைகளை முழுமையாக அறிந்து அவர்களுக்கு நம்பிக்கை உரியவர்களாக, அவர்களது பிரச்சினைக்கு தீர்வை வழங்குபவர்களாக, அவர்களிடம் நெருக்கமாக மனம் திறந்து கதைத்தல் மற்றும் அவர்களுடன் சுமுகமாகப் பேசுதல் அத்துடன் ஒத்துணர்வை வழங்குதல் என்பவற்றின் மூலம் அவர்களை தளர்வான மனநிலைக்கு கொண்டு வந்து அறிவுரைகளை வழங்கி தொடர்ச்சியான பயிற்சி மூலம் அவர்களை வழமையான நிலைமைக்கு மாற்ற வேண்டும். இந்த நடைமுறைகளைத்தான் நாம் பின்பற்றி வருகின்றோம்.

### தூக்கமின்மைக்குக் காரணங்கள் எவை?

காதல் தோல்வி, இழப்புகளின் துயர், உறவுகளுக்கு இடையிலான விரிசல், காணாமல் ஆக்கப்பட்டோரின் தாக்கம், சுனாமியின் தாக்கம், இடப்பெயர்வு, போதைப்பொருளுக்கு அடிமையான சகோதரர்கள் மற்றும் பெற்றோர், குடும்ப உறவுகள் இடையில் மனநோயின் தாக்கம், பாலியல் ரீதியான பாதிப்புகளை எதிர்கொள்ளல் அல்லது கடந்து வருதல், வீட்டில் அமைதியற்ற போக்கு காணப்படுதல், பரீட்சையை எதிர்நோக்க முடியாமை போன்றன இன்று பல்கலைக்கழக மாணவர்கள் தம் தூக்கத்தைத் தொலைக்கின்றமைக்குக் காரணங்களாக உள்ளன.

### சரியான தூக்கமின்மையால் ஏற்படும் பாதிப்புகள் எவை?

மாரடைப்பு, ஆஸ்துமா, சர்க்கரை நோய், மனநோய் மனச்சோர்வு, பதகளிப்பு, பதற்றம், எரிச்சல், கோபம், சக்தி வீணாகுதல், தலைவலி, மயக்கம் போன்ற நோய்கள் ஏற்படுவதுடன் வயது முதிர்ந்த தோற்றம், தலைமுடி நரைத்தல், கண் சார்ந்த நோய்கள் உள்ளிட்ட பாதிப்புகள் தூக்கமின்மையால் ஏற்படுகின்றன.

இவற்றுக்குத் தீர்வாக, மனதை அமைதியாக வைத்துக் கொள்ளல், நேர்மறையான சிந்தனைகளை வளர்த்தல், அமைதியான இடங்களில் நேரத்தைச் செலவிடுதல் உள்ளிட்ட நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் ஆரோக்கியமான தூக்கத்துக்கு வழிவகைகளைத் தேடிக் கொள்ளலாம். அனேகமான கண்டுபிடிப்புகள் கனவுகளின் வழியே நிறைவு பெறுகின்றன. எனவே சரியான உறக்கத்தை பேணுவது அவசியமானதும் தவிர்க்க முடியாததுமாகும்.

---

# நால்வர் குருபூஜையால் நெகிழ்ந்தது மன்னார்

மன்னார் என்றதும் ஞாபகத்தில் முதல் வருவது திருக்கேதீஸ்வரம். அடுத்து எமக்கு மருந்தாவது பாலாவித் தீர்த்தம். தொடர்ந்து நாயன்மார் பாடிய பாடல்களாகும். இந்த இரண்டு பதிகங்களும் திருக்கேதீஸ்வரத்தில் ஒலித்த வண்ணமுள்ளன. இவை உள்ளடங்கலாகச் சமய குரவர்களது பாசுரங்கள் குறைவின்றி திருக்கேதீஸ்வரத்தில் ஒலிக்கின்றன. இதனை மேலும் திருவருள் கூட்டும் வகையிலே 'திருக்கேதீஸ்வரம் அம்மை அப்பன் இல்லத்தின்' ஸ்தாபகரும் பொறுப்பாளருமான திருமதி சி.வல்லிபுரத்தின் ஏற்பாட்டில் நால்வர் குருபூஜை விழா கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், அம்மை அப்பன் இல்ல விசுவாசிகள் எனப் பலரும் கலந்து இவ்விழாவினைத் தெய்வீக சாதனையாகத் திகழச் செய்தனர். 'கேடிலாத கேதீச்சரம் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே. இது உண்மையல்லவா! வண்டு பண் செய்யும் மாமலர்ப் பொழில் மஞ்ஞை நடனமிடும் மாதோட்டம் இது அல்லவா! அடேயப்பா! அம்மை அப்பன் இல்ல வளாகத்தில் ஓர் அழகான கலசாரமண்டபம் வல்லிபுரம் அம்மாவால் எழுப்பப்பெற்றுள்ளது. அன்னை ஓர் ஆன்மிக இயந்திரமாய் மன்னாரில் திகழ்கின்றார். திருக்கேதீஸ்வர ஆலய ஓதுவார் தலைமையில், நால்வர் துதியோடு வரவேற்பு நடனம், வரவேற்புரை ஆசியுரை, தலைமை உரை, கதாப்பிரசங்கம், பண்ணிசை, குழுநடனம், சிவத்தாண்டவம், சொற்பொழிவு, சிறப்பு விருந்தினர் உரை எனத் தவறுபேறுடன் விழாவானது பூரண திருப்தியுடன் இராப்போசன உபசாரங்களுடன் நிறைவெய்தியது. பிரதம விருந்தினரான மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி அதிபர் பி.பாலபவானும், சிறப்பு விருந்தினராக மன்னார் கௌரி அம்பாள் தமிழ் மகா வித்தியாலய அதிபர் ரீ.கோகிலராஜாவும் தத்தமது வாஞ்சைமிகு பேருரையினால் விழாவுக்கு மகுடம் சூட்டினர். மன்னார் கௌரி அம்பாள் தமிழ் மகா வித்தியாலய ஆசிரியை க.கனகதுர்க்கா இந்தவிழாவின் ஆதார சுருதியாக இருந்து விழாவினைச் சிறப்பித்து 'பிழையுள்ளன பொறுத்திடுவர்' எனும் ஆழ்ந்த சொற்மொழிவொன்றினை ஆற்றி சபையோரைப் போறாக்கினார். அன்னை வல்லிபுரம் அம்மாவின் தூரநோக்கானது மன்னாருக்கு முதலீடானது. மாணவ மணிகளது அத்தனை நிகழ்ச்சிகளும் மெய்சிலிர்க்க வைத்தமை சம்பந்தப்பட்ட அனைவரையும் பாராட்டுமாறு உள்ளங்கள் எழுந்தன. சிவத்தாண்டவ ஆற்றுகைக்கு பதக்கம்சூடி பெருமைகொள்ள முடியும். அறநெறிப்பாடசாலை பொறுப்பாசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையில் திருமதி நந்தகுமார் நாக பாலினி வெற்றிபெறுகின்றார். திருமறை ஓதலுடன் விழா நிறை மங்களமானது. அடுத்த விழா எப்போது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்குச் சென்றார் தாய்வானின் துணைஅதிபர்!

தாய்வானின் துணை அதிபர் வில்லியம் லாய், அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். இதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சீனா தாய்வானை தனது நாட்டின் ஒரு பகுதி என்று சொந்தம் கொண்டாடி வருகின்றது. ஆனால், தாய்வான்சீனாவுடன் இணைவதை விரும்பவில்லை. தன்னை ஒரு தனிநாடு என்று அடையாளப்படுத்தி வைத்துள்ளது. இந்த நிலையில், தாய்வானின் துணை அதிபர் வில்லியம்ஸ் லாய் அமெரிக்காவுக்கும் பராகுவேக்கும் அண்மையில் சென்றுள்ளார். இந்த இரு நாடுகளும் சீனாவின் எதிரி நாடுகளாக இப்போது திகழ்கின்றன. இவ்வாறானதொரு நிலையில், தாய்வான் துணை அதிபரின் பயணத்துக்குச் சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (ம)


## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

அரச பாதுகாப்பு நிறுவனமாகிய எல்.ஆர்.டி.சி (L.R.D.C) ஆண், பெண் இருபாலாரும் தேவை. வயதெல்லை - 20 - 55 வரை. நல்ல தேகாரோக்கியம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு உடனடியாக பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

- ✔ யாழ். போதனா வைத்தியசாலை
- ✔ நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை
- ✔ சித்த ஆயுள்வேத வைத்தியசாலை

**077 433 1841, 071 559 0908, 070 471 0097**

(CS25956)AH-1



## திருக்கேதீச்சர ஆலயம் - மன்னார் முகாமையாளர், பரிசாரகர் தேவை

மேற்படி ஆலயத்திற்கு ஆசார சீலராகவும், நிர்வாகத் திறமை வாய்ந்தவரும் ஆலய நடைமுறைகளில் பரீட்சையமாகவுள்ள **முகாமையாளர்** ஒருவரும், பிராமணகுல **பரிசாரகர்** ஒருவரும் தேவை. தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தங்குமிட வசதிகள் மற்றும் அவசியமான அனைத்து வசதிகளும் செய்து தரப்படுவதுடன் தகுதிக்கு ஏற்ப கொடுப்பனவும் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிபரங்கள் மற்றும் அனுபவங்களை நீங்களாகவே தயார் செய்து, **தலைவர், திருக்கேதீச்சர ஆலயம், திருக்கேதீச்சரம், மன்னார்** என்ற முகவரிக்கு நேரிலோ அன்றேல் பதிவுத் தபால் மூலமோ **எதிர் வரும் 25.08.2023 ஆம் திகதிக்கு முன்னர்** அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:-
**071 6893068, 070 5111 942**
ஆகிய எண்களுடன் தொடர்பு கொள்ளமுடியும்.

**திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை**

(CS 25963)A-1



## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தர்மலிங்கம் தர்மராஜா

(ஓய்வுபெற்ற உதவித்தொழில் ஆணையாளர் - வவுனியா)

தோற்றம் 17.07.1940
மறைவு 16.08.2010
திதி: 24.07.2023

அப்பா,
பதின்மூன்று ஆண்டுகள் சென்றால் என்ன?
"நீங்கள் இருந்திருந்தால் ..........." - இவ்வாறு நினைக்காத நாள் இல்லை அப்பா!
எப்போதும் எங்களுக்காய் சிந்திக்கும்
எங்களுக்காய் போராடும் நீங்கள் எங்கே அப்பா இப்போ?
தினமும் உங்களை பிரார்த்திக்கும் - உங்கள்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும் நாங்கள் தனியே இங்கே அப்பா!
உங்கள் ஆத்மா சாந்திபெற நெட்டிலிப்பாய் பிள்ளையார்
பாதங்களை பற்றுகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

அப்பிளானை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

(cs 51644) (N.1)

குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்



### திரு.கந்தசாமி நல்லையா

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்)

மாதகல் மேற்கை பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிக்குளத்தினை நிரந்தர வதிவிடமாகவும் கொழும்பினை தற்காலிக வதிவிடமாக கொண்டவருமான திரு. கந்தசாமி நல்லையா ( ஓய்வுபெற்ற பிரதி அதிபர் ) கடந்த (14.08.2023) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சிதம்பரம் தம்பதியினரின் பாசமிகு மகனும், அமரர். கந்தையா ( ஆயுள்வேத வைத்தியர்) கண்மணி தம்பதியினரின் அன்பு மருமகனும், இன்பவதியின் அன்புக் கணவரும், பிரதிபா, பிரசன்னா ( மக்கள் வங்கி ) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமரனின் அன்பு மாமனாரும், கனகரத்தினம், குகநாதன், நிர்மலாதேவி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகேஸ்வரி, கௌரி, வரதராஜா, ஈஸ்வரி, மல்லிகாவதி, சத்தியவதி, கோகுலவதி, பரமநாதன் ஜமுனாவதி, குகவதி ஆகியோரின் மைத்துனரும் ராஜன் பூபாலசிங்கம், சார்வானந்தன், கனேஷ்குமார், மோகனதாஸ், விஜிதரன், கிருபாணி ஆகியோரின் சகலனும், யாழினி, தமிழினி, மாதினி, சொரூபன் ஆகியோரின் சிறிய தந்தையும், ரஜீவன் மீரா, அபிராமி, சாதுரியா, பிரவீனன், இந்துஷன், ஹர்ஷன் சர்மிகா, சதுஷன், அகிலவன்,ஆதீசன்,கேஷான், நீஷான், காவியன், கவினயா ஆகியோரின் பெரியப்பாவும், மகினிஷ், மானுஷ், மௌநிஷ் சாலினி, சாமினி, ஷாரா ஆகியோரின் அன்பு மாமாவும், சிவானி, ஸ்ரேனா, சித்திரா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (17.08.2023) வியாழக்கிழமை மு.ப 10:00 மணியளவில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சநாதன் குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: குடும்பத்தினர்.

57/7 அம்மன் கோவில் வீதி
பண்டாரிக்குளம்,
வவுனியா.

தொடர்புகளுக்கு :
0714 879516 - மகன் பிரசன்னா
0771275692 - சகோதரர் குகநாதன்.

(CR 80438) A-1



"ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ"

## மரண அறிவித்தல்

பிறப்பு 23 09 1957



இறப்பு 13 08 2023

### திருமதி சிவலிங்கம் தங்கமணி (சின்னமணி)

மாவிட்டபுரம் மடத்தடியை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் தங்கமணி (சின்னமணி) அவர்கள் கடந்த (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவலிங்கம் (சிவலிங்கம் சிற்பகலாலயம்) அவர்களின் பாசமிகு மனைவியும், சிவப்பிரபா (Mobil lubricants நிறுவன வட பிராந்திய நிறைவேற்று விற்பனை பிரதிநிதி) அவர்களின் பாசமிகு தாயாரும், சிவசங்கர் (லண்டன்), சிவரஞ்சனி (பிரான்ஸ்), சிவராஜ் (DS Office, உடுவில்) ஆகியோரின் சிறிய தாயாரும், சந்திரீன், உதயசங்கர், சிந்தியா ஆகியோரின் மாமியாரும், சிதம்பரநாதன், கனகம்மா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, ஜீவரட்ணம், இராசதுரை, துரைராஜா, மகாலிங்கம் மற்றும் நாகரட்ணம், கந்தசாமி ஆகியோரின் மைத்துனியும், அஸ்வராணி, அபிஷாந், சுப்ரவின், சாத்வின், அஸ்வின், ஆதிரா, செழியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவலிங்கம் - கணவர் - 077 127 4451
பிரபா - மகன் - 077 110 5852


தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25964) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில் • 12 • 12 • 1971



விண்ணில் • 14 • 08 • 2023

## சங்கரப்பிள்ளை சிவகுமார் (B.A,M.A)

**(அபிவிருத்தி உத்தியோகத்தர், பதில் கடற்றொழில் பரிசோதகர், அகில இலங்கை சமாதான நீதவான், மொழி பெயர்ப்பாளர் தமிழ் – சிங்களம், சிங்களம் – தமிழ், சிங்கள போதனாசிரியர் – அரச கருமமொழி திணைக்களம்)**

சாரையடி, புலோலியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவகுமார் நேற்றுமுன்தினம் (14.08.2023) திங்கட்கிழமை உடுப்பிட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கந்தசாமி - செல்லபாக்கியம் தம்பதியரின் இளைய மருமகனும், வனஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கரவெட்டி) அவர்களின் அன்புக் கணவரும் அனோஜன் (மாணவன், ய/ஹாட்லிக்கல்லூரி), அட்சயன் (மாணவன், யா/ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசங்கரின் அன்புச் சகோதரனும் மோகனரூபி, உமாதேவி (லண்டன்), சந்திரகுமார் (லண்டன்), கிரிஷா (லண்டன்), யசோதா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் பிரபாகரன், பவானிதேவி, இராஜகுமார், ஜெயராசா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2023) புதன்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரம்பவாளி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS/25957)AH-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 31 - 05 - 1946



மறைவு 13 - 08 - 2023

## செல்லத்துரை பரமேஸ்வரன் (கண்ணன்)

பழைய வீதி கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும் வீரபத்திரர் கோவிலடி கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பரமேஸ்வரன் கடந்த (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இந்திராதேவியின் பாசமிகு கணவரும், கிரிதரன் (கனடா), பகீரதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷா, ராஜி ஆகியோரின் அன்புமாமனாரும், நிலவன், காவியா, ரெஷிறா, ரெஷான் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பாக்கியநாதன், பத்மறஞ்சி, பத்மாவதி, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயலட்சுமி, மகாலிங்கம், காலஞ்சென்ற தவராஜா மற்றும் வசந்தகுமாரி, செல்வராணி, லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2023 வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்கா்க முற்பகல் 11.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இந்திரகிரி**
**வீரபத்திரர் கோவிலடி**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**021 223 0104**


(CS 51647)(K-1)

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**13.09.1955**

## செல்லத்துரை ஆறுமுகம் (சூட்டி)

**மறைவு**
**12.08.2023**



எழுதுமட்டுவாள் தெற்கைப் பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஆறுமுகம் அவர்கள் கடந்த (12.08.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பேச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும், மனோன்மணி அவர்களின் பாசமிகு கணவரும், நிஷாந் (முன்னாள் ஆசிரியர், கனடா), நிறோஜாந், நிலான், நிக்ஷன், நிர்முஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், மயூரி, கௌசிகா, பூஜிகா, அனுஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஜிகா, நிஜிகன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற நடராசா, செல்வராசா, ராஜேஸ்வரி, பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற லக்ஷிமி, ராஜேந்திரி, பவானிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


**சண்முகானந்தா வீதி,**
**கல்வயல்,**
**சாவகச்சேரி.**

**நிஷாந் - 077 698 7013**
**நிறோஜாந் - 077 410 9057**

(CS 51681)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம்
18 . 01 . 1945

மறைவு
17 . 07 . 2023

கடந்த 17.07.2023 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் மனோன்மணி செல்வராஜா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.08.2023) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும், அன்னாரின் இறுதிச் சடங்கில் நேரிலும், தொலைபேசியிலும் கலந்துரையாடி ஆறுதல் தெரிவித்த உறவினர்கள், அன்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**51, ராஜஸ்தான்,**
**காளிகோவில் வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

(CS/51648)AH-1

**குடும்பத்தினர்.**
**077 640 4374**

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 06 . 1951



மறைவு
13 . 08 . 2023

### திருமதி பிறேமாவதி ராசேந்திரா

யாழ். கோண்டாவில் வடக்கு சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறேமாவதி ராசேந்திரா அவர்கள் கடந்த (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம், சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா, நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ராசேந்திரா அவர்களின் அருமை மனைவியும், நந்தபாலன்(லண்டன்), நடேசபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கெங்காதேவி, நிலாமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், தீபக், சோபிதா, பிறேம்நாத், தர்ஷிகா, செந்தூரன், மிதுனன், திலக்ஷன், சிந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற சான்வி, சிஜென்னா, யூவன் மற்றும் செய்டன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2023) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் ந.ப 12:00 மணியளவில் நடைபெற்று, கோண்டாவில் வாழ் மக்கள் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

பொ. நந்தபாலன் - சகோதரன்
Mobile: +447488228088

பொ. நந்தபாலன் - சகோதரன்
Mobile : +94770733538

பொ. நடேசபாலன் - சகோதரன்
Mobile: +94770742137

பொ. நடேசபாலன் - சகோதரன்
Mobile: +33665736924

(CS 25950) A-1

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் ஆனந்தரெட்ணசாமி

**(உரிமையாளர், எவகிறீன் அச்சகம் – மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்)**



யாழ்ப்பாணம், காரைநகர், பண்டித்தாழ்வைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு, 25/1, மாரியம்மன் கோவில் வீதி, கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் ஆனந்தரெட்ணசாமி அவர்கள் கடந்த (14.08.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான மாரிமுத்து - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், சித்தியாம்பாளின் பாசமிகு கணவரும், பிரசாத் (எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு), பிரதாப் (நியூ எவகிறீன் அச்சகம், யாழ்ப்பாணம்), பிரதீப் (மென்பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற குமாரசாமி (அதிபர்), ஜெயானந்தசாமி, நித்தியானந்தசாமி, குணரெட்ணசாமி (சுரேனா ரவல்ஸ்), சற்குணராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காயத்திரி, மலர்மகள், விஜித்தா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வசந்தகுமாரி, மியூரியல், கல்யாணி, ஜெனட்ஜெயசாந்தினி, கலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காயத்திரி, காண்டீபன் ஆகியோரின் சித்தப்பாவும், மிதுன், புவிராஜ், தக்ஷியா, லக்ஷியா, சுரேந்திரா, சுஜித்ரா, சுபேந்திரா, அனோஜன், தசலக்ஷன், அம்சவன் ஆகியோரின் பெரியப்பாவும், நவிஷ்கா, ரோஹித், ரித்திக்கா, ஆறுகா, யாழினி, சம்யுக்தா ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2023) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டக்களப்பு கள்ளியங்காடு இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**25/1, மாரியம்மன் கோவில் வீதி,**
**கல்லடி, மட்டக்களப்பு.**
**தொ.பே: 077 433 2140, 077 714 1444**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 வாகனங்கள்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கொழும்பு, வெல்லம்பிட்டிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பொருள்களை ஏற்றிய வாறு இரண்டு சிறிய ரக லொறிகளில் சுமார் பதி னைந்து பேர் வந்துள்ளனர். இந்தநிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியின் பனிக்கன்குளம் பகு தியில் நேற்று அதிகாலைவேளை வந்த லொறி களில் ஒன்றின் சில்லு காற்றுப் போனதால், அவர் கள் இரு வாகனங்களையும் நிறுத்தி விட்டு ரயர் மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அப்போது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக வந்த கே.டி.எச். ரக வாகன மொன்று அதிகாலை மூன்று மணியளவில், வீதியோரமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் மோத, அது மற்றைய லொறியோடும் முட்டிமோதியது.

இவ்வாறு மூன்று வாகனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதிய நிலையில் கே.டி.எச். ரக வாகனத் தில் வந்த ம.கைலைவாணன் (உதயனின் முன் னாள் பணியாளர்) மற்றும் ரயர் மாற்றிக் கொண் டிருந்தவர்களில் இருவர் என மூவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். எட்டுப் பேர் காயமடைந்துள் ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் மாங்கு ளம் ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட் டுள்ள நிலையில், காயமடைந்தவர்களில் மூவர் மாங்குளம் ஆதார மருத்துவமனையிலும், ஐவர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையிலும் சிகிச் சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாங்குளம்பொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம.123,113,26)



## பிரபாவின்...

2009ஆம் ஆண்டு இறுதிப்போரின் பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மற் றும் அவர்களின் குடும்பத்தவர்கள் தொடர்பில் இதுவரை உறுதியான எந்த நிலைப்பாடும் இல்லை. இலங்கை அரசாங்கமும், இராணுவ மும் பிரபாகரனின் குடும்பத்தினர் கொல்லப்பட்டு விட்டனர் என்று தெரிவித்து வருகின்றன. எனி னும், பிரபாகரன் இறந்தமைக்காக இறப்புச் சான்றிதழை அரசாங்கம் தரவில்லை. இதே வேளை - பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்ப தான தகவல்கள் அவ்வப்போது வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழகத்தின் முதுபெரும் அரசியல் வாதியான பழநெடுமாறன்கூட பிரபாகரனும் அவருடைய குடும்பத்தினரும் உயிருடன் உள் ளனர் என்று அண்மையில் தெரிவித்தார். இது சர்வதேசரீதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யது. இந்த நிலையில், பிரபாகரனின் மனைவி மதிவதனி மற்றும் அவருடைய மகள் துவாரகா இருவரும் தற்போது உயிருடன் உள்ளனர் என்று டென்மார்க்கிலுள்ள மதிவதனியின் சகோதரி வீடியோப் பதிவு ஒன்றில் தெரியப்படுத்தியுள்ளார். அவர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடி உணவருந்தியுள்ளேன் என்றும் இது கடவுள் கொடுத்த கொடை என்றும் மதிவதனியின் சகோ தரி அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-ம.26)

## மடுத்...

கத்தோலிக்க திருச் சபையின் இலங் கைக்கான நேரடிப் பிரதிநிதி பேராயர் கர் தினால் பிரையன் உடக்வே தலைமை யில் இந்தத் திருவி ழாத் திருப்பலி ஒப் புக்கொடுக்கப்பட் டது. மடுத்திருவிழா வின் சிறப்பம்சமான மடு அன்னையின் தேர்ப்பவனி காலை 8.40 மணியளவில் இடம்பெற்றது. பிரத் தியேகமாக அலங்க ரிக்கப்பட்ட வாகனத் தில்மாதாஎழுந்தருளி அருள்பாலித்தாள். சுமார் 25 நிமிடங் கள் இந்தத் தேர்ப்ப வனி இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து, திருத்தலப் பிரியா விடை ஜெபம் ஒப் புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்துமாதாவின் திருச்சொரூப ஆசீ ரும் இடம்பெற்றது. மாதாவின் சொரூப ஆசீரையும்பேராயர் கர்தினால் பிரையன் உடக்வேவழங்கினார். திருவிழாவில் ஜனா திபதிரணில்விக்கிரம சிங்க கலந்துகொண் டார். அத்துடன், மன் னார் ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர் னாண்டோஆண்டகை, இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி மன்றத் தலைவர் கலாநிதி சந்ரா பெர்னாண்டோ உள்ளிட்ட அருட்தந் தையர்கள், கலாசார அலுவல்கள்அமைச் சர் விதுர விக்கிரம நாயக்க, அமைச்சர் நளின்பெர்னாண்டோ, இராஜாங்க அமைச் சர்கள் அருந்திக பெர்னாண்டோ, காதர் மஸ்தான், நாடாளு மன்ற உறுப்பினர்க ளான காவிந்த ஜய வர்த்தன, செல்வம் அடைக்கலநாதன், சார்ல்ஸ்நிர்மலநாதன், தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதி பதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனா திபதியின் பணிக்கு ழாம்பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-ம.26,60,213)

சிசுவுக்கு மருத்துவம் மறுப்பு

# தாதியர்களை விசாரிக்க மூவரைக் கொண்ட குழு

வவுனியா, ஒக. 16

வவுனியா பொதுமருத்துவமனையில் சிசுவொன்றுக்குத் தாதியர்களால் சிகிச்சை மறுக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்படும் குற்றச்சாட்டில், விசாரணை நடத்துவதற்காக வடக்கு மாகாண ஆளு நரால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள் ளது.

இந்தக் குழு அடுத்த இரண்டு வாரங்க ளுக்குள் இது தொடர்பில் முழுமையான அறிக்கை வழங்கவேண்டும் என்று ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். அத்து டன் இது தொடர்பில் வடமாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர் சத்திய மூர்த்தியால் இன்றையதினம் ஊடகவி யலாளர் சந்திப்பொன்றும் நடத்தப்பட வுள்ளது.

வவுனியா மருத்துவமனையில் கடந்த 4ஆம் திகதி குழந்தை பேற்றிற்காக அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண் மற்றும் அவரது கணவருடன் பிரசவ விடுதியில் கடமையிலிருந்த தாதிய உத் தியோகத்தர் ஒருவர் முரண்பட்ட நிலை யில், குழந்தை பிறந்த பின்னரும் குறித்த முரண்பாடு தொடர்ந்தது. இந்த முரண்பாட்டால் சிசுவுக்கு தாதியர்க ளால் சிகிச்சை மறுக்கப்பட்டது என்றும் சிசுவின் தந்தை குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பிலேயே விசாரணை நடத்த ஆளுநர் குழுவொன்றை அமைத்துள் ளார். (ம-26-18)



# ஈரானின் ஏவுகணைகளால் பலம்பெறுகின்றது ரஷ்யா

கீவ், ஒக. 16

ஈரான் தற்போது வெற்றிகரமாகத் தயா ரித்துள்ள அதிநவீனமும் வேகமானது மான ஏவுகணைகளால், உக்ரைனுக்கு எதிரானபோரில்ரஷ்யாபலம்பெற்றுள்ளது என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதல் களை எதிர்கொள்வதற்காக உலகின் மிகச்சிறந்த வினைத்தி றன் மிக்க 'அயன்டோமை' தனக்கு ஒப்படைக்கு மாறு உக்ரைன் இஸ்ரேலிடம் முன்ன தாகத் தெரிவித்திருந்தது. இது ரஷ் யாவை ஆத்திரமூட்டும் என்பதால் அந்தக் கோரிக்கையை இஸ்ரேல் நிரா கரித்தது. அமெரிக்காவும் இந்தக் கோரிக்கையை நிராகரித்தது. இப்போது பின்லாந்தின் மூலமாக இந்த அயன் டோமைப் பெற்றுள்ளது உக்ரைன்.

இதனால் ரஷ்யாவின் ஏவுகணைகள் இனி உக்ரைனைத் தாக்காது என்ற நிலையில், தற்போது ஈரானால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஏவுகணைகள் இந்தப் போரில் உக்ரைனுக்குப் பின்னடைவாக அமைந்துள்ளது. ஏனெனில், ஈரானின் ட்ரோன்களும், ஆயுதங்களும்தான் உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யா வால் இப்போதுவரை பயன்படுத்தப்படு கின்றன. உக்ரைனின் பின்னணியில் அமெரிக்கா நிற்பதைப்போன்று ரஷ்யா வின் பின்னணியில் ஈரான் நிற்கின்றது. எனவே, இப்போது கண்டுபிடிக்கப்பட் டுள்ள ஏவுகணை களும் ரஷ்யாவிடம் ஒப்படைக்கப்படும் பட்சத்தில் அது உக் ரைனில் உள்ள அயன்டோம்களைத் தாண்டி உக்ரைனைத் தாக்கும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. (ம)

## காணாமலாக்கப்பட்டோரின்...

மடுத்திருத்தலத்தின் திருவிழாத் திருப்பலி நேற்று ஒப்புக்கொடுக்கப்பட்டது. திரு விழாவின் நிறைவில் பிரத்தியேக வாகனத்தில் மாதாவின் தேர்ப்பவனியும் இடம்பெற்றது. லட்சோபலட்சம் பக்தர்களுக்கு மத்தியில் மாதாவைத் தாங்கிய வாகனம் வலம் வந்தது. இதன்போதே காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் ஒளிப்படங்களை ஏந்தியவாறு அவர்களின் உறவுகள் மாதாவை நோக்கிக் கண் ணீர் விட்டமுதனர். (அ-ம)

## கீரிமலைத்...

ஆடி அமாவாசை விரதத்தை முன்னிட்டு பல்லாயிரம் அடியவர்கள் நேற்று கீரிமலை தீர்த்தக்கரையில் தீர்த்தமாடி பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர். இந்த நிலையில் தீர்த்தக்கேணியின் தீர்த்தம் நன்னீராக நேற்று மாறியுள்ளது. இதற்கு முன்னரும் கீரிமலையில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி அமாவாசை:

# மண்சட்டி, மரக்கறிகள் விலை நேற்று உச்சம்!

யாழ்ப்பாணம், ஓக. 16

ஆடி அமாவாசை விரதமான நேற்றையதினம் யாழ். குடாநாட்டுச் சந்தைகளில் மண் சட்டிகளின் விலையும், மரக்கறி களின் விலையும் அதிகரித்திருந் தன. குடாநாட்டின் பல பகுதிகளி லும் வாகனங்களில் வைத்து மண்சட்டிகள் விற்கப்பட்டன. வன்னிப் பகுதி யில் இருந்து கொண்டுவரப்பட்ட மண்சட்டிகள் விற்பனை செய்யப்பட்டன.

அத்துடன் விரதத்துக்கு பயன்ப டுத்தப்படும் கற்றோட்டிக் காய் விற்பனையும் சந்தைகளில் சூடு பிடித்தி ருந்தது. இம்முறை நில வும் கடும் வறட்சிநிலை காரண மாக அவற்றுக்கு தட்டுப்பாடும் நிலவியது.

கற்றோட்டிக்காய் கிலோ இரண்டாயிரம் ரூபா முதல் இரண்டாயிரத்து 500 ரூபா வரையில் விற் பனை செய்யப்பட்டன.

அத்துடன், பாகற்காய், பயிற்றங் காய் உள்ளிட்ட மரக்கறிகளின் விலையும் உயர்வாகக் காணப் பட்டன. பயிற்றங்காய் கிலோ 800 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது. (ச-17)


## வேலைக்கு ஆள் தேவை (பெண்)

தனியார் நிறுவனம் ஒன்றின் கச்சேரி, நல்லூர் வீதியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு நன்கு முன்னனுபவ முள்ள சிற்றுண்டிகள் (பற்றீஸ் / றோல்) தயாரிப்பதற்குப் பெண் ஊழியர் தேவை. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ள முடியும். (CS/51682)AH-1

**074 391 0850**

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி



- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

021 222 8093 17, Kandy Road, Jaffna

## பெண் உதவியாளர்கள் தேவை

ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் பல் மூக்கு கண்ணாடி ஸ்தாபனத்திற்கு பெண் உதவி யாளர்கள் தேவை. யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்கள் மட்டும்.

தொடர்பு: 074 378 1026
077 025 9877

## வேலையாட்கள் தேவை

மூளாய் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு உணவு தயாரிப்பாளர் மற்றும் மேசை பராமரிப்பாளர் வேலைகளுக்கு ஆட்கள் தேவை. (CS/51679)AH-1

**076 779 7674**

## காணி விற்பனைக்கு

உசன் தெற்கில் 22 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. A9 வீதியில் இருந்து 1 3/4 கிலோமீற்றர் தூரத்தில் உசன் கெற்பெலி வீதியில்.

**077 1877 018**

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் குரு ஹாட்வெயார் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் பணியாளர்கள் தேவை.

1. **மனேஜர்** - Lanka Tile Showroom -
ஆண், சிங்களம் ஆங்கிலம் தெரிந்தவர்.
2. Lanka Tile **விற்பனையாளர்** - ஆண்
3. **விற்பனை பிரதிநிதி** சீமெந்து - ஆண்
4. **கணக்குப்பதிவாளர்** - ஆண் / பெண்

மேற்படி பணிகளுக்கு ஆட்கள் தேவை.
தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **குரு ஹாட்வெயார்**
**இல. 175, கரடிபோக்குச் சந்தி - கிளிநொச்சி.**
**0777 435 265**

குறிப்பு: நிறுவனத்தில் இருந்து 5 km சுற்றவுள்ள தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. (CR 40437) A-1


## காணவில்லை



நெடுந்தீவு, 14ம் வட்டாரம் கிழக்கில் வசிக்கும் **தம்பிப்பிள்ளை விதுஷன்** (கோபி) வயது - 27 என்பவரை கடந்த (10.08.2023) வியாழக்கிழமை நெடுந்தீவு கிழக்கு தீர்த்தக்கரையில் கடலில் தெப்பத்துடன் சென்ற நிலையில் இன்றுவரை அவரைக் காணவில்லை. கண்டவர்கள் அறியத்தரவும்.

(CS/51678)AH-1

**077 720 8644, 077 913 0857**

## மரண அறிவித்தல்

### திருமதி கௌரிமலர் நாவேந்தன்

( சமுர்த்தி முகாமையாளர்- சங்கானை, தற்காலிக இணைப்பு கோப்பாய் )



தோற்றம் 12.10.1971 மறைவு 14.08.2023

பலாலி கிழக்கை பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கௌரிமலர் நாவேந்தன் (14.08.2023) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் செல்லத்துரை செல்லம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகராசா நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் நாவேந்தன் அவர்களின் அன்பு மனைவியும் இலங்காராணி (ஆசிரிய நூலகர். யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்). நந்தகுமாரி (லண்டன் ). ஆனந்த செல்வராணி (ஆசிரியர் யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்). திருக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும். லோகநாதன் (டயஸ். இரசாயனவியல் ஆசிரியர் New Scince World) சுதாகரன் (லண்டன்). குமார சிறி (அஞ்சல் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்). கர்ஷிகா (லண்டன்). நந்தகுமார் (இத்தாலி) ஆகியோரின் மைத்துனியும் சுவஷ்டிகா. கம்சாந். நேருஷா (லண்டன்). ஆதன்யன் (லண்டன்). அரவன் (லண்டன்). ஹிசானி. கீர்த்திகா ஆகியோரின் பெரியம்மாவும் யுவனின் (லண்டன்) அத்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் (பலாலி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பலாலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பலாலி கிழக்கு**
**076 309 4993, 0752416957, 0774118846**

**தகவல்: குடும்பத்தினர்**


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் **32 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.

- *நிலப்பரப்பு
- *மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
- *பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 km மீற்றர் தூரம்.
- *நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- *ஒரு பரப்பின் விலை ஐந்து லட்சம் (500,000/=)
- *பின்பக்கம் உள்ள காணி 1 பரப்பு இரண்டு லட்சத்து ஐம்பது ஆயிரம் (250,000/=) மட்டும்
- *நல்ல சூழலில் நன்னீர் ஊற்று.

**தொடர்பு: 076 057 0354**
**076 8260 354**

(CS 25959)A-1


## மரண அறிவித்தல்

தோற்றம் 19 09 1939



மறைவு 14 08 2023

### திருமதி.விஜயதேவி சுந்தரராஜன்

(காரைநகர்)

மலேசியாவை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை துணைவி. காரைநகர் சம்பந்தர்கண்டியில் வசித்தவருமாகிய. திருமதி.விஜயதேவி சுந்தரராஜன் திங்கட்கிழமை (14.08.2023) கொழும்பில் காலமானார். அன்னார் அமரர்களான சுப்பிரமணியம் (MBE - JP) மங்கையற்கரசி தம்பதியின் அன்பு மகளும். அமரர்களான நாகலிங்கம் (சம்பந்தர்கண்டி காரைநகர் ) அமிர்தரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற சுந்தரராஜன் (ஓய்வு பெற்ற இலங்கை விமான படை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும். நடராஜனின் (கனடா) அன்புத் தாயாரும். கலைச்செல்வியின் (சூட்டி) அன்பு மாமியாரும். மதுரா. மாதேஷ். மகேஷ் ஆகியோரின் அன்பு பேத்தியும். காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி. வாமதேவன். மகாதேவன். சகாதேவன். பாலதேவன். ஜெயதேவன். நகுலதேவன் மற்றும் சரோஜினிதேவி (கனடா). கமலாதேவி (கனடா). இந்திராதேவி. காலஞ்சென்றவர்களான ஜெயதேவி மற்றும் சத்தியதேவன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி. மகேஸ்வரி ஞானமணி. பரமேஸ்வரி. சின்னராஜா. சண்முகதாசன். சிவபாதம் மற்றும் செல்வரத்தினம். மகாலட்சுமி. நிர்மலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை (17.08.2023) காலை 8.00 மணிக்கு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 10.00 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று 11.00 மணியளவில் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.**

**தொடர்புகளுக்கு**
நடராஜன் - மகன் (கனடா) + 1437 221 9679 / கலைச்செல்வி (மருமகள்) - 0770798146
சரோஜினிதேவி சகோதரி (கனடா) +19054713175
பாலகிருஷ்ணன் மைத்துனர் - (074) 071 0123
குஞ்சிதபாதம் மைத்துனர் (கனடா) +14168353132



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.